REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 மே 28 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN 92 ANNIVERSARY தினකරන්
வரு. 92 இல. 126 | Tuesday 28, May, 2024 | 16 பக்கங்கள் | 50/-




## அரச மருத்துவமனைகளில் தங்கியிருக்கும்
# நோயாளிகளுக்கு பரிமாறும் உணவை மேம்படுத்த திட்டம்
## ஜூலை மாதம் முன்னோடித் திட்டம் ஆரம்பம்

**தனியார் மருத்துவமனைகளுக்கு இணையாக உணவுகள் வழங்கப்படுமென போஷாக்கு தொடர்பான வைத்திய நிபுணர்கள் சங்கம் தெரிவிப்பு**

அரசாங்க மருத்துவமனைகளில் தங்கியிருந்து சிகிச்சைபெறும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவை, நவீனமயப்படுத்த சுகாதார அமைச்சும் இலங்கை போஷாக்கு தொடர்பான வைத்திய நிபுணர்கள் சங்கமும் இணைந்து தீர்மானித்துள்ளன.

மருத்துவமனைகளில் தங்கியிருந்து சிகிச்சைபெறும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவுகள் தனித்தனியாக, குறிப்பாக சாதம் மற்றும் கறி வகைகள் தனித் தனியாக ஒரு தட்டில் பரிமாறப்பட்டு அவை வெளியே தெரியும் விதத்தில் மூடப்பட்டு நோயாளியின் கைகளிலேயே தரப்படுமென இலங்கை போசாக்கு தொடர்பான வைத்திய நிபுணர் சங்கத்தின் தலைவர் நளின் டி ஹேரத் நேற்று (27) தெரிவித்தார்.

இத்திட்டத்தின் முன்னோடித் திட்டம் எதிர்வரும் ஜூலை மாதம் மஹரகம அபேக்ஷா மருத்துவமனையில் ஆரம்பிக்கப் படுமெனவும், அதன் பின்னர் நாடு முழுவதுமுள்ள அனைத்து அரசாங்க மருத்துவமனைகளிலும் இதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

ஐந்து நட்சத்திர ஹோட்டல்களின் சமையற் கலைஞர்களின் வழிகாட்டல் மற்றும் பயிற்சிகளுடன் 06

# வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கு "உறுமய" திட்டத்தின் கீழ் காணி உறுதிகள்
## முழு உரிமையுடன் ஜனாதிபதி தலைமையில் 5400 உறுதிகள் வழங்கிவைப்பு



**விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை கிராமங்களுக்கு எடுத்துச் செல்வதற்கான ஆரம்ப முன்னெடுப்பு என்றும் ஜனாதிபதி தெரிவிப்பு**

"உறுமய" வேலைத்திட்டத்தின் கீழ் வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட மக்களுக்கு காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

வவுனிய மாவட்டத்தின் 04 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் மன்னார் மாவட்டத்தின் 05 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய 700 பேருக்கு முழு உரிமையுள்ள காணி உறுதிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கினார். வவுனியா மோஜோ விழா மண்டபத்தில் நேற்று முன்தினம் (26) இவ்வுறுதிகள் வழங்கப்பட்டன. 06

# மாலைதீவு பிரஜைகளுக்கு முப்பது நாள் சுற்றுலா விசா
## இலவசமாக வழங்க தீர்மானம்

மாலைதீவு பிரஜைகளுக்கு 30 நாள் சுற்றுலா விசா இலவசமாக வழங்கப்படவுள்ளது. இவர்கள் இலங்கைக்கு வந்த பின்னர், இந்த விசாக்களை இலவசமாக பெற்றுக்கொள்ள முடியுமென மாலைதீவு வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

மாலைதீவு பிரஜைகள் 30 நாட்களுக்கு மேல் தங்குவதற்கு https://www.srilankaevisa.lk என்ற இணையத்தளத்துக்குச் சென்று 06 மாத இலவச விசாவுக்கு Online ஊடாக விண்ணப்பிக்க முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த விசாவுக்கு நிர்வாகக் கட்டணம் வசூலிக் கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இல்லையெனில், ஏற்கனவே இலங்கையிலிருக்கும் மாலைதீவு பிரஜைகள் மற்றும் விசா நீடிப்பு தேவைப்படுபவர்கள் கொழும்பிலுள்ள மாலைதீவு உயர்ஸ்தானிகராலயத்தை தொடர்பு கொள்ளவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கையில் புதிய E Visa முறையின் அறிவிப்புடன், மாலைதீவு சுற்றுலாப் பயணிகள் எவ்வித பாதிப்புமின்றி 06

# சீரற்ற காலநிலை; அனர்த்தங்களை எதிர்கொள்ள முன் ஏற்பாடுகள்

சீரற்ற காலநிலையால் ஏற்படும் சம்பவங்களை எதிர்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அனர்த்த முகாமைத்துவ ஏற்பாடுகள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் தென்னகோன் ஊடகங்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமை தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்தபண்டார தென்னகோன் தலைமையில் நேற்று (மே27) கொழும்பு அனர்த்த முகாமைத்துவ 06

# மழையுடனான காலநிலை; டெங்கு பரவல் கடும் தீவிரம்




## கொழும்பு 5,244 பேர், யாழ். 3,887 பேர், கம்பஹா 2,293 பேர், பாதிப்பு

நாட்டில் தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலையால் டெங்கு பரவல் தீவிரமடைந்துள்ளது.இதனால்,பாதிக்கப்பட்ட

வர்களின் எண்ணிக்கை 47.2வீதமாக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 13 முதல் 19 வரையான காலப்பகுதியில் இவ்வருடம் ஆரம்பமான 20 ஆவது வாரத்தில் 770 டெங்கு நோயாளரும், 19 ஆவது வாரத்தில் 523 பேரும் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 19ஆவது வாரத்துடன் ஒப்பிடுகையில் 20ஆவது வாரத்தில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதெனவும் தெரிவி

க்கப்படுகிறது.19 ஆவது வாரத்தில் 08 ஆக இருந்த டெங்கு அபாய வலயங்களின் எண்ணிக்கை 20 ஆவது வாரத்தில் 09 ஆக அதிகரித்துள்ளது. 06

## ஜனாதிபதி தேர்தலுக்கே ரூ.1,000 கோடி
# பொதுத் தேர்தல் நடத்த நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை




பொதுத்தேர்தலை நடத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லையெனத் தெரிவித்துள்ள தேர்தல் ஆணைக்குழு, ஜனாதிபதித் தேர்தலை நடத்தவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது. தேர்தல் ஆணைக்குழுவின் பிரதானி ஏ.எல்.ரட்ணாயக்க இதுபற்றி தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமாயின் ஜனாதிபதி 06

# ரூ. 50 கோடி பெறுமதியான அம்பருடன் மீனவர் கைது
## பேருவளை, கரடகொடயில் சம்பவம்



பேருவளை, கரடகொட பகுதியில்30கிலோ அம்பருடன் மீனவர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தார். பேருவளை கரையோரப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின்படி இவர் கைது செய்யப்பட்டுள்ளார். 06

# நாட்டின் பிரஜைகளின் சொத்துகள் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு
## புதிய சட்டமொன்று அமுலுக்கு வருவதாக அமையாது



நாட்டின் பிரஜைகளின் சொத்துகள் தொடர்பான தகவலை பெற்றுக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவிப்பு, புதிய சட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதாக அமையாதென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்கள் உட்பட இலங்கை பிரஜைகளின் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் தொடர்பான தகவல்கள், உள்நாட்டு இறைவரி திணைக்களத்துக்கு எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி 06

## ஈரான் ஜனாதிபதியின் மறைவுக்கு அமைச்சர் ஜீவன் இரங்கல் பதிவு



ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் திடீர் மறைவுக்கு, அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டு அமைச்சர் ஜீவன்தொண்டமான் நேற்று (27) கொழும்பில் உள்ள ஈரான் தூதரகத்துக்கு சென்றார்.அங்கு வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் அமைச்சர் தனது அனுதாபங்களை பதவிட்டமை குறிப்பிடத்தக்கது. 06

இலங்கை பரீட்சைத் திணைக்களம் Department of Examinations
03
தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை விண்ணப்பங்கள் நேற்று முதல் ஏற்பு
www.onlineexams.gov.lk ஊடாக விண்ணப்பிக்கலாம்

# தமிழ் தரப்பு பொது வேட்பாளர் ஜூன் 09 இல், கருத்துப் பரிமாறல்
## யாழ் நகரில் எம்.ஏ.சுமந்திரன் MP ஏற்பாடு



தமிழர் தரப்பு பொது வேட்பாளர் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் கருத்துக்களை பரிமாறும் நிகழ்வை நடத்தவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடத்திய ஊடகச் சந்திப்பிலேயே, இவ்வாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழர் தரப்பு பொது வேட்பாளர் தொடர்பிலான முன்னெடுப்புக்களை செய்துவரும் சிவில் சமூக பிரதிநிதிகள், பத்தி எழுத்தாளர்கள் உள்ளிட்டவர்கள் 06

# கரையை கடந்தது றீமால் புயல் மழை மேலும் தொடரும் சாத்தியம்
## மீனவருக்கான சிவப்பு எச்சரிக்கை தொடர்கிறது



தென்மேற்கு பருவப் பெயர்ச்சி காரணமாக தற்போது நிலவும் கடும் மழை மற்றும் காற்றுடன் கூடிய வானிலை மேலும் தொடருமென, வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. மேல் மாகாணம், சப்ரகமுவ மாகாணம், மத்திய மாகாணம், வடமேல் மாகாணம் 06



03
இந்தியாவில் கைதான ISIS நால்வர் ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்பா?
தீவிர விசாரணைக்கு IGP பணிப்பு

## Elon Musk உலகப் புகழ் முதலீடுகள்
# நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் உதவும்



டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் தலைவர் எலோன் மஸ்க் (Elon Musk) போன்ற உலகப் புகழ்பெற்ற வர்த்தகர்களின் முதலீடுகளை ஈர்க்க முடிந்தால், அது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பாக அமையும் என, 06

## பொருளாதார நெருக்கடி நிலையிலும்
# வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதில் ஜனாதிபதி தீவிரம்



பொருளாதார நெருக்கடி நிலையிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு மக்களின் பல பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதில், தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டாரென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதாக கூறி பல ஜனாதிபதிகள் பதவிக்கு வந்தபோதிலும், எவரும் அது தொடர்பில் உரிய கவனம் செலுத்தவில்லையென்றும் பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் தெரிவித்தார்.

இரண்டு வருடங்களுக்கு முன் நாட்டின் பொறுப்பை ஏற்பதில் அச்சமடைந்த சிலர், தற்போது ஜனாதிபதியின் 06

## உயர்தர தொழிநுட்ப பிரிவு மாணவர்களுக்கு
# ஜனாதிபதி நிதிய புலமைப்பரிசில் விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

க.பொ.த உயர்தர தகவல் தொழிநுட்பத்தை பாடமாக கற்கும் மாணவர்களுக்கு இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் ஜனாதிபதி நிதியம் இணைந்து வழங்கும் புலமைப்பரிசில் வேலைத் திட்டத்திற்கான – 2024/2025 விண்ணப்பங்களை ஏற்கும் 06

# மாங்குளம் ஆதார வைத்தியசாலை நிகழ்வில் ஜனாதிபதி























# வவுனியாவில் "உறுமய" காணி உறுதிகள் வழங்கல்

















தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 மே 28 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்




**தொழுகை நேரம்**
சுபஹ் - 04.32
லுஹர் - 12.09
அஸர் - 03.34
மஃரிப் - 06.22
இஷா - 07.38

**இன்றைய சுபதினம்**
குரோதி வருடம் வைகாசி 15
ராகுகாலம் : பகல் : 2.52 - 4.42வரை
சுபநேரம் : காலை : 10.22 - 11.52வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# ஹோமாகம, கலவிலவத்த, சகாபோ வீதிகளை புனரமைக்கும் பணிகள் ஆரம்பம்

## 1,500 கி.மீ. வீதிகளை புனரமைக்கும் திட்டத்தின் கீழ் வேலைகள் முன்னெடுப்பு




அமைச்சர் பந்துல தலைமையில் வீதிகளைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. இதற்கிணங்க 2024 திட்டத்தின் கீழ்,

1500 கிலோமீற்றர் வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.இந்த வகையில்,ஹோமாகம கலவில வத்த, சகாபோ மாவத்தை புனரமைப்பு பணிகளை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன ஆரம்பித்து வைத்தார்.

நீண்ட நாட்களாக முறையான புனரமைப்பின்றி சேதமடைந்த இவ்வீதிகளால் பிரதேசவாசிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

பிரதேசவாசிகளின் வேண்டுகோளுக்கிணங்க அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கிணங்க இவ்வீதிகளை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. சஹஸ்யா முதலீட்டு நிறுவனத்தின் தலைமைச் செயலதிகாரி கே. டபிள்யூ. கண்டம்பி, வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், பிரதேச மக்கள், பிரதிநிதிகள், மற்றும் பிரதேசவாசிகள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

மத்திய ஆபிரிக்க குடியரசில்

# இலங்கை விமானப்படையால் மீட்புப்பணிகள் முன்னெடுப்பு



மத்திய ஆபிரிக்க குடியரசில், ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இலங்கை விமானப்படையின் ஒன்பதாவது படைப்பிரிவினர், ரஃபாய் பகுதியில் விபத்தொன்றில் சிக்கிய உறுப்பினர்களை மீட்டெடுத்தனர்.

Mi17 UNO 324P ரக விமானம் மூலம் மீட்கப்பட்ட ஐ.நா. உறுப்பினர் மூவர்,பாதுகாப்பாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுவதை படங்களில் காணலாம்.இவ்விபத்து,கடந்த (20) இல், இடம்பெற்றது.

# ஹந்தபான்வில ஏரியில் உயிரிழந்த 07 யானைகளின் உடல்கள் மீட்பு



வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் ஹந்தபான்வில தேசிய பூங்கா ஏரியில் உயிரிழந்த, ஏழு காட்டு யானைகளின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கால்வாயில் பல இடங்களில் சேற்றில் கிடந்த இந்த 07 யானைகளின் உடல்கள், நேற்று முன்தினமும் நேற்றும் இரு தினங்களில் வனவிலங்கு அதிகாரிகளால் மீட்கப்பட்டன.

08 முதல் 10 வருடங்களைக் கொண்ட ஐந்து குட்டி யானைகளும் 30 முதல் 35 வருடங்கள் உள்ள இரண்டு காட்டு யானைகளுமே இவ்வாறு உயிர் இழந்ததாக தெரிய வந்துள்ளது. பள்ளத்தாக்கு தேசிய பூங்காவில் சுற்றித் திரிந்த இந்த காட்டு யானைகள், கால்வாயை கடக்கும் போது நீரில் அடித்து செல்லப்பட்டிருக்கலாமென வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ரஷ்யா, மியன்மாரிலுள்ள இலங்கையரை மீட்க விசேட குழு

## நேற்று தாய்லாந்து பயணமானது

மியன்மாரில் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 49 இலங்கை இளைஞர்கள் மற்றும் ரஷ்யாவிலுள்ள இலங்கை படைவீரர்களை மீட்டு நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நேற்று (27) விஷேட குழுவொன்று தாய்லாந்துக்கு சென்றுள்ளது.

பத்து நாள் பயணமாகச் சென்றுள்ள இக் குழுவில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் இடம்பெற்றுள்ளனர்.

இவர்களை மீட்டுவருவதற்கான இராஜதந்திர மற்றும் மூன்றாம் தரப்பு பேச்சுவார்த்தைகளில் இக்குழு ஈடுபடவுள்ளது.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி வசந்த யாப்பா பண்டார, ஜே.சி. அலவத்துவல மற்றும் சுஜித் சஞ்சய் பெரேரா ஆகியோர் இக்குழுவில் அடங்கியுள்ளனர். குழுவினர் மியன்மாரில் ஐந்து நாட்களும், ரஷ்யாவில் ஐந்து நாட்களும் தங்கியிருந்து மீட்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளனர்.



06

# கொழும்பு– புத்தளம் ரயில் சேவை வழமைக்கு திரும்பியது

கடும் மழை,வெள்ளம் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த கொழும்பு புத்தளம் ரயில் சேவை நேற்று (27) முதல் வழமைக்கு திரும்பியுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

முந்தலிலிருந்து புத்தளம் வரையான ரயில் பாதை வெள்ளத்தில் மூழ்கியதால், கடந்த 21 முதல் கொழும்பிலிருந்து பங்கதெனிய வரையுமே ரயில் சேவை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

# அரச, அரசு துறை வேலை வாய்ப்புகள் இன்று ஒரே நாளில் தொகை மதிப்பீடு

## புள்ளி விபர திணைக்களம் ஏற்பாடு

( ஒலுவில் தினகரன் நிருபர்)

தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபர திணைக்களத்தால் 11ஆவது “அரச மற்றும் அரசு சார்ந்த துறை வேலை வாய்ப்பு தொடர்பான தொகை மதிப்பு 2022/23” நாடு தழுவிய ரீதியில் ஒரே நாளில் 2024ஆம் ஆண்டுக்கான தொகை மதிப்பு இன்று (28) நடைபெறவுள்ளதாக, தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபர திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

மத்திய அரசாங்க நிறுவனங்களின் கீழ் இயங்கும் திணைக்களங்கள், நியதிச்சட்டரீதியான சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள், அரச கம்பனிகள் உள்ளிட்ட நிறுவனங்கள் மற்றும் மாகாண அரச துறையின் கீழ் இயங்கும் திணைக்களங்கள், அரச நிறுவனங்கள் ஆகியவற்றில் கடமையாற்றும் சகல உத்தியோகத்தர்களும் தொகை மதிப்புக்கு உள்ளடக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கணக்கெடுப்பில் நிரந்தர, அமைய, சமயா சமய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் நியமனம்

06

# எவரெஸ்ட் மலையின் சிகரத்தை 02 வாரத்தில் 03 முறை ஏறி சாதனை

உலகின் மிக உயரமான எவரெஸ்ட் மலையின் சிகரத்தை இரண்டே வாரத்தில், மூன்று முறை ஏறிய சாதனையை நேபாளப் பெண்ணொருவர் நிகழ்த்தியுள்ளார்.

நேபாளத்தின் மலையேறும் புகைப்படப் பத்திரிகையாளரான பூர்ணிமா ஷ்ரேஸ்தா என்ற பெண்ணே இந்த சாதனையை படைத்துள்ளார்.

சுமார் 8,848.86 மீட்டர் உயரமுடைய எவரெஸ்ட் மலையின் உச்சத்தை இவர், முதலில் மே 12 இல், சென்றடைந்தார்.

இதனையடுத்து, மீண்டும் அவர் மே 19 இல், பசாங் ஷெர்பாவுடன் இணைந்து எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்தார்.

அத்துடன் கடந்த (25) காலை 5:50 மணிக்கு மூன்றாவது முறையாக எவரெஸ்ட் மலையின் உச்சியை பூர்ணிமா அடைந்துள்ளார்.

அத்துடன், இப்பெண் 2018 ஆம் ஆண்டு முதல் முறையாக எவரெஸ்ட் மலையில் ஏறினார். இது, அவர் எவரெஸ்ட் மலையில் ஏறும் நான்காவது முறையென தெரிவிக்கப்படுகிறது.

அவர் மனாஸ்லு, அன்னபூர்ணா, தௌலகிரி, கஞ்சன்ஜங்கா,



லோட்சே, மகலு மற்றும் மவுண்ட் கே 02 உள்ளிட்ட உயரமான பல மலை சிகரங்களை வெற்றிகரமாக எறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை விண்ணப்பங்கள் நேற்றுமுதல் ஆரம்பம்

## www.onlineexams.gov.lk ஊடாக விண்ணப்பிக்கலாம்

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கான இணையவழி விண்ணப்பங்களை நேற்று (27) முதல் ஏற்றுக்கொள்ள ஆரம்பித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர அறிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் ஜூன் (14 ) வரை இணையவழி முறை



யூடாக விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

06

# இலங்கை குடிவரவு கட்டமைப்பை மேம்படுத்த சிங்கப்பூர் ஒத்துழைப்பு

## சிங்கப்பூர் பிரதிநிதிகள் மே 31 வரை ஆராய்வு

இலங்கையின் குடிவரவு முறை கட்டமைப்பை மேம்படுத்துவதில் உயர் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களை வழங்கும் வாய்ப்புகளை ஆராய்வதற்காக சிங்கப்பூர் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

இக்குழுவினர் இம் மாதம் 31 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார்கள் என்றும் இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக சிங்கப்பூருக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் செனரத் திசாநாயக்க, சிங்கப்பூர் குடிவரவு சோதனை நிலைய அதிகார சபையின் (ICA) அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

குடிவரவு முறை கட்டமைப்பில் சிங்கப்பூர் கொண்டுள்ள தரத்தை அடைவதே இதன் நோக்கமாகும். சிங்கப்பூர் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரும் சட்ட அமைச்சருமான கே. சண்முகத்துக்கும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலசுக்குமிடையில் நடைபெற்ற கலந்துரையாடலில், அமைச்சர் டிரான் அலஸ் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க இக்குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இச்சந்திப்பின் போது, எல்லைக் கட்டுப்பாட்டில் இலங்கை எதிர்கொள்ளும் சவால்களை உயர்ஸ்தானிகர் எடுத்துரைத்தார். அமைச்சரும் இலங்கை குடிவரவு திணைக்களமும் தூதுக்குழுவை வரவேற்பதில் ஆர்வமாக உள்ளதாகவும் தெரிவித்தார். சிங்கப்பூரின் நிபுணத்துவம் மற்றும் நுண்ணறிவு மற்றும் குடியேற்ற செயல்முறைகளை நவீனமயமாக்க இலங்கையின் இத்தகைய முயற்சிகள் பெரிதும் உதவும் என்றும் உயர்ஸ்தானிகர் மேலும் கூறினார்.

# இந்தியாவில் கைதான ISIS நால்வர் ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்பா?

## தீவிர விசாரணைக்கு IGP பணிப்பு

இந்தியாவில் கைதான ISIS அமைப்புடன் தொடர்புடைய இலங்கையருக்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கும் தொடர்புள்ளதா? என்பதை அறிவதற்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.



கடுவெல பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் இதுபற்றி கூறியுள்ளார்.

''இந்தியா மீது தாக்குதல் நடத்தச் சென்ற போது கைது செய்யப்பட்டதாக கூறப்படும் நான்கு ISIS உறுப்பினர்களில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர் ஒருவரும் உள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தகவலை மிகவும் தீவிரமாக விசாரிக்குமாறு, பொலிஸ் சட்டப் பிரிவுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அவர்தெரிவித்துள்ளார்.

பொலிஸ் சட்டப்பிரிவால் இது தொடர்பில் தமக்கு விரைவில் அறிவிக்கப்படுமென தெரிவித்த அவர், ஊடகங்களில் இதுபற்றிக் குறிப்பிடப்பிட்டிருந்த போதிலும், இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லையென அவர் கூறினார்.

# ஜனநாயகத்தின் மீது தாக்குதல் நடத்தி நாட்டை சீர்குலைக்க சதி

நாட்டின் ஜனநாயகத்தின் மீது தாக்குதல் நடத்தி அரசியல் ரீதியாக நாட்டை சீர்குலைக்கும் நுட்பமான சதி நீண்டகாலமாக தீட்டப்பட்டு வருவதாக,பாராளுமன்ற பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அம்பலாந்தோட்டையில் "மார்ச் 12" இயக்கம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதி சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய அவர்:

நாட்டின் ஜனநாயகத்தை சீர்குலைக்க நீண்ட காலமாக சதித் திட்டம் தீட்டப்படுகிறது.

இதற்காக, மக்களின் மனங்களை மாற்றுவதற்கு சில சமூக ஊடகங்கள் செயற்படுகின்றன. மாற்று வேலைத்திட்டம் எதையும் முன்வைக்காமல், பாராளுமன்றத்தில் உள்ள 225 எம்பிக்களையும் தாக்குவதாக இவர்கள் கூறுகின்றனர்.



பாராளுமன்றம் நாட்டுக்கு ஆற்றும் சேவைகளை அறியாமல் இவ்வாறு இவர்கள் கூறுகின்றனர்.இதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது, 225 பேரையும் எவ்வளவு கேவலமாக பேசினாலும், 225 பேரில் ஒருவராக இருப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். மகாவலித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து நாட்டில் இயங்கி வரும் நீர்ப்பாசன முறை பற்றி நான்,அறிவேன். தற்போது உமா ஓயா திட்டத்திலும் அதனை நாம் அறிவோம். இன்றைக்கு சில வருடங்களுக்கு முன்னர் சூரிய வெவ புதிய அபிவிருத்தி திட்டத்தை ஆரம்பிக்கும் போது கொங்கிரிட் கான் மூலமே நீரை கொண்டு சென்றார்கள். அதுதான் அன்றிருந்த நீர் முகாமைத்துவம். இந்த கொங்ரிட் கான்கள் மூலம் தண்ணீரைக் கொண்டு சென்றால் பாலைவனமே மிஞ்சும் என்றார்கள். நிலத்துக்கு ஒரு சொட்டு நீரும் கிடைக்காத இத்திட்டம் தோல்வியான திட்டம் என்று விமர்சித்தனர். கடந்த காலங்களில் நிலவிய காலமாக நிலயவி வரட்சியால், சூரிய வெவயில் தண்ணீர் மற்றும் உணவு இல்லாத நிலை இருந்தது.திட்டத்தை முறையாக அமுல்படுத்தியதும் வரட்சியும் இல்லாது போய்,பயிர்ச்செய்கைகள் செழிப்படைந்தன. எனவே, நமது அரசியல் இலக்குகள் எதுவாக இருந்தாலும், அதை நாம் நம்

06

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் வைகாசி மாதம் 15ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்கஃதா பிறை 19

## குறள் தரும் சிந்தனை



அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்

மனமகிழ்ச்சியை முகமலர்ச்சியால் காட்டி விருந்தினரை வரவேற்பவர் வீட்டில் அமர்ந்து செல்வம் எனும் திருமகள் வாழ்வாள்.

# மக்களுக்குக் கிடைத்துள்ள காணிஉரிமை பெறும் வாய்ப்பு

தற்போது நாட்டில் முன்னெடுக்கப்படும் பாரிய வேலைத்திட்டங்களில் 20 இலட்சம் பேருக்கு காணி உறுதிகளை பெற்றுக்கொடுக்கும் உறுமய வேலைத்திட்டம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இத்திட்டத்தின் ஊடாக முழுமையான காணி உறுதிகள் முதன் முறையாகப் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் பெற்றுக் கொடுக்கப்படும் காணிகளில் மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர். விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். இருந்தும் கூட அவர்களுக்கு காணிக்கான உரிமை பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

குறிப்பாக 1935 முதல் இந்நாட்டில் மக்களுக்கு விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் குடியிருப்புக்களை அமைத்துக் கொள்வதற்கும் காணிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனாலும் அந்த நிலத்தின் முழுமையான காணி உரிமை அதனைப் பயன்படுத்துபவர்களுக்கு வழங்கப்படவில்லை.

என்றாலும் இந்தக் காணிகளில் வாழும், விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்கும் மக்கள் இந்நாட்டின் பொருளாதாரத்திற்கும் குறிப்பாக விவசாயத்துறைக்கும் தங்கள் பங்களிப்புக்களை ஆற்றி வருகின்றனர்.

அவர்கள் பயன்படுத்தும் காணிக்கான உரிமையை வழங்க கடந்த காலங்களில் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் இது தொடர்பில் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் அதற்கு எதிராக சிலர் நீதிமன்றத்துக்குச் சென்றனர். அதனால் அத்திட்டத்தை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இருந்த போதிலும் மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய தற்போது மக்களுக்கு காணி உறுதிகளைப் பெற்றுக்கொடுக்கும் இந்த உறுமய வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

அந்த வகையில் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மத்திய மகாவித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காணி உறுதி வழங்கும் வைபவத்தில் பிரதமஅதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'ஜனாதிபதி என்ற வகையில் காணி வழங்கும் அதிகாரம் எனக்கு உள்ளது. அப்படியிருந்தும் புதிய சட்டங்களை நிறைவேற்றாமல், நீதிமன்றத்துக்கு செல்லாமல் வெள்ளையர் காணிகளைக் கையகப்படுத்தப் பயன்படுத்திய அதே சட்டத்தின் கீழ் நாட்டு மக்களுக்கு முழுமையான காணி உரிமை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளேன்' என்றார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பையும் இவ்வேலைத்திட்டத்தையும் மக்கள் பெரிதும் வரவேற்று பாராட்டியுள்ளனர்.

நாட்டின் பல பிரதேசங்களில் இரண்டு மூன்று தலை முறைகளாக வாழ்கின்ற மக்களின் காணிக்கும் அவர்கள் விவசாயம் செய்கின்ற நிலத்துக்கும் கூட காணி உரிமை இல்லாமல் பெருமளவிலான மக்கள் உள்ளனர். அவர்கள் காணி உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கான நீண்ட கால எதிர்பார்ப்புடன் இருந்து வருகின்றனர். அவர்களது எதிர்பார்ப்பின்படி காணி உரிமையை பெற்றுக் கொடுக்கவென கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளும் முழுமையாக நடைமுறைக்கு வரவில்லை.

ஆன போதிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த மக்களின் எதிர்ப்பில் கூடுதல் கவனம் செலுத்தி இந்த உரிமய திட்டத்தை செயலுருப்படுத்தியுள்ளார். இத்திட்டத்திற்கென புதிய சட்ட ஏற்பாடுகள் நிறைவேற்றப்படவோ அறிமுகப்படுத்தப்படவோ இல்லை. நடைமுறையில் உள்ள சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில்தான் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேநேரம் இவ்வைபவத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி, இந்தக் காணிகளுக்கு முழு உரிமையுடன் காணி உறுதிப்பத்திரம் மக்களுக்கு வழங்கப்பட்டால் அவர்கள் நிலத்தை விற்றுவிடுவார்கள் என்று பலர் என்னிடம் கூறினர். இரண்டு தலைமுறைகள் அனுபவித்த நிலத்தை அவர்கள் விற்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. இந்த நிலங்கள் உங்களுக்குரியவை' என்று குறிப்பிட்டதோடு 'இந்நாட்டில் மேற்கொள்ளப்படும் மிகப் பெரிய தனியார் மயமாக்கல் திட்டம் இது என்றும் இவ்வாறான வேலைத்திட்டம் தெற்காசியாவில் இலங்கையில் மட்டுமே முன்னெடுக்கப்படுகிறது' என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுதான் உண்மையும் ஆகும். உலகின் பல நாடுகளிலும் நில உரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக பாரிய புரட்சிகளும் இரத்தம் சிந்துதல்களும் இடம் பெற்றுள்ளன. அதன் பின்னரே அந்நாடுகளது மக்கள் நிலத்துக்கான உரிமையைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள். ஆனால் அவ்வாறான புரட்சியோ, இரத்தம் சிந்துதலோ இன்றி தாம் வாழும், பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் காணிக்கான உரிமை பெற்றுக் கொடுக்கும் வாய்ப்பை இந்நாட்டு மக்கள் பெற்றுக் கொண்டுள்ளனர். அந்த வகையில் இந்நாட்டு மக்கள் அதிஷ்டசாலிகள் என உறுதிபடக் கூறலாம்.

ஆகவே தாம் பயன்படுத்தும் காணிக்கான உரிமையை பெற்றுக் கொள்ளும் ஒவ்வொருவரும் அக்காணியை உச்சளவில் பயன்படுத்தி நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு பங்களிக்க வேண்டும். அது ஒவ்வொரு குடிமகனினதும் பொறுப்பாகும். நாட்டை உண்மையாகவே நேசிப்பவரின் பணியும் அதுவாகவே இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# உளநலனை சீராகப் பேணுவதன் மூலமே ஆரோக்கியமான உடல்நலம் பெறலாம்

நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு உடல் ஆரோக்கியம் மட்டுமன்றி உள ஆரோக்கியமும் முக்கியமாகக் கருதப்படுகிறது. ஒருவரின் உடல் ஆரோக்கியத்தில் உள ஆரோக்கியம் மிகுந்த செல்வாக்குச் செலுத்துகின்றது.

உளவியல் தாக்கமானது மனஅழுத்தத்தின் ஆணிவேராக இருக்கின்றது. ஒருவர் தனது வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைவதற்கு உளவியல் தாக்கம் தடையாக அமைகிறது. சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள், பெண்கள், வளர்ந்தவர்கள் என பல்வேறு தரப்பினர் உளரீதியான நெருக்கடிக்கு உள்ளாகின்றனர். குடும்ப வாழ்விலும் தொழில்புரியும் இடங்களிலும் பலர் நெருக்கடிக்கு உள்ளாகின்றனர். .இதனால் அவர்களின் உடல் (நலன்) ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு உளவியல் தாக்கம் ஏற்படுகிறது.

உளவியல் தாக்கம் ஏற்படக் காரணங்கள் வருமாறு:

★வளரும் பருவத்தினர் சிறுவர் பெரியவர் ஆகியயோரில் ஏற்படுகின்ற உடலியல் மற்றும் உளவியல் மாற்றங்கள்.

★போதுமான தூக்கமின்மை, தொலைக்காட்சி பார்த்தல், ஸ்மார்ட்போனில் அதிக நேரம் செலவழித்தல்.

★கல்வி மற்றும் பரீட்சைகளில் முகம் கொடுக்கின்ற சவால்கள்.

★ விளையாடுவதற்கும் சுறுசுறுப்பாக இருப்பதற்கும் போதிய நேரமின்மை.

★ அடிக்கடி இரைச்சல் மிகுந்த ஒலிகளை செவிமடுத்தல்.

★ தாம் வாழும் சூழலில் எதிர்கொள்கின்ற முரண்பாடுகள் துஷ்பிரயோகங்கள்.

★நண்பர்கள் மற்றும் சகோதரர்களிடையே ஏற்படும் சண்டைகள் மனத்தாக்கங்கள்.




★ புகைத்தல், மதுபாவனை, போதை வஸ்து பாவனை.

★ முறையற்ற பாலியல் தொடர்புகளில் ஈடுபடுதல், இதனால் மன அழுத்தம் ஏற்படல்.

உளவியல் தாக்கமானது மன அழுத்தத்தின் ஆணிவேராக இருக்கின்றது. ஒருவர் மன அழுத்தத்திற்கு ஆளாகும் போது அதன் அடையாளமாக உடல்சார்ந்த அசௌகரியம் ஏற்படும்.

உளத்தாக்கத்தின் அறிகுறிகள்:

★ தலைவலி, கழுத்து மற்றும் தோள் மூட்டில் தசை வலி.

★ எப்போதும் உடல் வலியை பற்றி கதைத்தல்

★பசியின்மை வயிற்றில் எரிச்சல் இருத்தல்

★ஒழுங்கற்ற நித்திரை, குடும்பச் சண்டை, உறவில் விரிசல், இலகுவில் கோபமடைதல், இதனால் தேவையற்ற பிரச்சனைகள் ஏற்படுதல்.

எனவே மனப்பதற்றத்தைத் தவிர்த்து கோபத்தை அடக்கிஆளுதல் வேண்டும்.

சிறந்த உள ஆரோக்கியத்தின் நன்மைகள் எவை?

கிரகித்தல், ஞாபக சக்தி, புத்திக்கூர்மை போன்றன அதிகரிக்கும். தன்னம்பிக்கை மற்றும் சுதந்திரம் போன்றன விருத்தியடையும், கல்விப்பெறுபேறுகள் சிறப்பாக இருத்தல், கோபம், பொறாமை, வெறுப்பு போன்ற எதிர்மறையான குணங்களை கட்டுப்படுத்தக் கூடியதாகவிருக்கும்.

வீடு பாடசாலை காரியாலயம் மற்றும் சமுதாயத்தில் சிறந்த உறவைப்பேண முடிதல். நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து உடல் ஆரோக்கியம் ஏற்படும்.

சிறந்த உள ஆரோக்கியத்தை பெறுவதற்கு நாம் பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் மற்றும் சூழ்நிலைகளை தவிர்த்தல், தொலைக்காட்சி பார்த்தல், கணனி என்பவற்றில் அதிக நேரம் ஈடுபடுதல் போன்றவற்றைத் தவிர்த்தல்.

விளையாடுதல், மதுப்பாவனை, போதைவஸ்து, முறையற்ற பாலியல் தொடர்பு என்பற்றைத் தவிர்த்தல், சமயப் பண்புகளைப் பின்பற்றி நடத்தல்,மனதுக்கு அமைதியைத் தருகின்ற நடவடிக்கையில் ஈடுபடுதல், நேர் சிந்தனை மற்றும் உயர்ந்த மனப்பாங்கை விருத்தி செய்தல், உடற்பயிற்சி செய்தல், சுறுசுறுப்பாக இருத்தல், உறவுகளுடன் அன்பாகநடத்தல், பிறருக்கு உதவுதல், போதுமான தூக்கத்தைபெறுதல், சமூக சேவைகளில் தன்னை அர்ப்பணித்தல்.

மனதை இலேசாக்கி சாந்தப்படுத்துவதற்கு போதுமானளவு நித்திரை அவசியம். அதிக நேரம் கல்வி கற்றலில் ஈடுபடும் மாணவர்களது ஆற்றலை முழுமையாக வெளிக்கொணர்வதற்கு நல்ல நித்திரை அவசியம். உடல் புத்துணர்ச்சி பெறுவதற்கும் தினமும் உடல் மற்றும் மனதிற்கு ஏற்பட்ட சேதங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கும் நித்திரை உதவுகின்றது.

கலாசார மற்றும் சமய விழுமியங்களை வளர்த்துக் கொள்வதும் அவசியம். சிறந்த ஆன்மீகம் ஒழுக்கப்பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

கருணை, பரிவு, அன்பு, பொறுமை காத்தல், பிறர் நலம் பேணுதல், மற்றவருக்கு உதவுதல் போன்ற விடங்களில் ஈடுபடுவது சிறந்த உளநலத்துக்கு உதவும்.



இஸ்மாயில் ஹுஸைன்தீன்...
(கல்வி மாணி) (B Ed)
அம்பாறை விசேட நிருபர்

# கல்குடா வலய புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலய நடைபவனி

கல்குடா கல்வி வலயத்தின் புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயத்தின் 64ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு, பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் 'வாணியன் நடைபவனி 2024' நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் அஸ்லி நிமலன் சௌந்தரநாயகம் இப்பாடசாலையில் அதிபராகப் பணியாற்றியவராவார். இப்பாடசாலையில் தரம் 5 வரை கற்ற பாடசாலையின் பழைய மாணவரான க.மகேசன் தற்போது விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக பணியாற்றுகிறார்.

இப்பாடசாலையினை முன்னேற்றி தரமுயர்த்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி அருந்ததி சுந்தரமூர்த்தி மற்றும் ஆசிரியர்கள், பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள் ஒன்றுபட்டு உழைத்துள்ளனர்.

க.பொ.த. சாதாரண தரத்துடன் காணப்பட்ட பாடசாலையில் உயர்தர கலைப்பிரிவு வகுப்பு நடத்துவதற்கான அனுமதி பெறப்பட்டது. பல்வேறு பௌதீக வளக் குறைபாடுகளுடன் விளங்கிய பாடசாலையில் பழைய மாணவர் சங்கத்தின் முயற்சியினால் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் க.மகேசன் அவர்கள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபராக பணியாற்றிய பொழுது அவரது பங்குபற்றுதலுடன், பாடசாலையின் அதிபராக விளங்கிய திருமதி அருந்ததி சுந்தரமூர்த்தி தலைமையில் உருவாக்கப்பட்ட பழைய மாணவர் சங்கம் பாடசாலையின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது. இப்பாடசாலைக்கு அழகிய முகப்பு மதில் மற்றும் நுழைவாயில் அமைக்கப்பட்டுள்ளதுடன், மட்டக்களப்பு மாவட்டத்திலேயே நவீன டிஜிட்டல் தரம்1 வகுப்பறையும் அமைக்கப்பட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் க.மகேசன் மற்றும் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் ஆகியோரை பிரதம அதிதிகளாக அமைத்து திறப்பு விழா நடத்தினர்.

அதன் பின்னர், பாடசாலையின் 64ஆவது ஆண்டு நிறைவினை சிறப்பிக்கும் வண்ணம் வாணி வித்தியாலயத்தின் பழைய மாணவர்களுக்கான கிரிக்கட் மென்பந்து சுற்றுப்போட்டி ஒன்றினையும் நடத்தியதுடன் பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக பழைய மாணவர்கள் பங்குபற்றிய நடைபவனி ஒன்றினையும் நடத்தி முடித்துள்ளனர்.

இந்நிகழ்வு பாடசாலையின் புதிய அதிபர் இ.விஜயகரன் தலைமையில் நடைபெற்றது. அதிதிகளாக இப்பாடசாலையில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இந்து, கிறிஸ்தவ மதகுருமாரின் ஆசீர்வாதத்துடன் தொடங்கிய இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற அதிபரும், மட்டக்களப்பு மற்றும் கல்குடா வலயங்களில் கோட்டக்கல்வி பணிப்பாளராக பணிபுரிந்தவருமான அ.சுகுமாரன் பாடசாலையின் பிறந்த நாள் கேக்கை வெட்டினார்.



அதனைத் தொடர்ந்து நடைபவனி ஆரம்பமானது. 2000ஆம் வருடம் முதல் 2020ஆம் வருடம் வரை கல்வி கற்ற பழைய மாணவர்கள் ஒவ்வொரு வகுப்பினராக தங்களுக்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட பதாதைகளை வாகனங்களில் காட்சிப்படுத்தியபடி நடைபவனியில் கலந்து கொண்டனர்.

இந்நடைபவனிக்கான வீதி ஒழுங்குகளை வாழைச்சேனை பொலிஸ் நிலைய வீதிப் போக்குவரத்து பொலிசார் மேற்கொண்டு உதவினர். பழைய மாணவர்களினால் தாகசாந்தி நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. நூற்றுக்கணக்கான பழைய மாணவர்கள் தங்கள் பாடசாலை வரலாற்றின் முக்கிய நிகழ்வில் கலந்து கொண்டு மகிழ்ச்சியுடன் பங்குபற்றினர். நடைபவனி நிறைவுற்றதும் பாடசாலை மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் வைத்து பிரதம அதிதிகளால் கிரிக்கட் சுற்றுப்போட்டி தொடரில் வெற்றியீட்டிய அணிகளுக்கான வெற்றிக்கேடயங்கள் வழங்கப்பட்டன.



ஏ. ஸ்ரீதர்...
(வாழைச்சேனை தினகரன் நிருபர்)

# ஆட்சியமைப்பதற்கு ஆயத்தம் செய்கிறது 'இந்தியா' கூட்டணி

## தேர்தல் முடிவு வெளிவர முன்னரே எதிர்க்கட்சிகள் ஆலோசனை; தி.மு.கவுக்கு பெருமளவு அமைச்சுப் பதவிகள்

இந்திய எதிர்க்கட்சிகளின் கூட்டணியான இந்தியா கூட்டணி (காங்கிரஸ் தலைமையிலான அணி) எதிர்வரும் ஜூன் 1ஆம் திகதி முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடத்த உள்ளது. இதில் முதல்வர் ஸ்டாலின் முக்கியமான சில விஷயங்களை முன்னிறுத்துவார் என்று தகவல்கள் வருகின்றன.

தேசிய அளவில் லோக்சபா தேர்தல் தீவிரம் இன்னும் முடியவில்லை. லோக்சபா தேர்தலுக்கான கொண்டாட்டங்கள், பிரசாரங்கள் மிகத் தீவிரமாக நடந்தபடியே இருக்கின்றன. இறுதிக்கட்ட வாக்குப்பதிவிற்கான பிரசாரங்கள் தீவிரமாக நடந்து வருகின்றன.



மக்களவைத் தேர்தலில் ஏழாவது மற்றும் கடைசி சுற்று வாக்குப்பதிவு நடைபெறும் நாளில் அதாவது ஜூன் 1 ஆம் திகதி எதிர்க்கட்சிகளின் கூட்டணியான இந்தியா கூட்டணி முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடத்த உள்ளது. இந்திய கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் டெல்லியில் கூடுவார்கள் என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தப்பட்ட விதம், தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள், பிரதமர் மோடியின் செயல்பாடு, தேர்தல் முடிவு வந்த பின்னர் என்ன செய்வது, முடிவு எதிராக வந்தால் என்ன செய்யலாம், முடிவு இந்திய கூட்டணிக்கு ஆதரவாக வந்தால் யாரை பிரதமராக்குவது என்றெல்லாம் ஆலோசனைகள் நடக்க வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

இந்த இந்திய கூட்டணி சந்திப்புக்கு முன்னதாக முதல்வர் ஸ்டாலின் முக்கியமான சில ஆலோசனைகளை மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழ்நாடு புதுச்சேரி உட்பட 40 இடங்களில் தி.மு.க வெற்றி பெறும் என்று ஸ்டாலினுக்கு உறுதியான அறிக்கை சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அவ்வாறு அமைந்தால் இந்தியா கூட்டணியே ஆட்சி அமைக்கும் என்றும் அறிக்கை சென்றுள்ளதாம்.

காங்கிரஸின் கடுமையான பிரசார யுக்திகளால் முதல் கட்ட தேர்தலில் பா.ஜ.க பின்னடைவையே சந்தித்தது. இப்படிப்பட்ட நிலையில்தான் 2024 லோக்சபா தேர்தலில் பா.ஜ.க புதிய பிரசார யுக்தியை கையில் எடுத்துள்ளது. வேறு யுக்திகள் சரிவராத காரணத்தால் மோடி பிரசார யுக்தியை மாற்றி உள்ளார் என்று தேர்தல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

மாவட்ட அளவில் நிர்வாகிகள் மற்றும் அமைச்சர்களிடம் தமிழக முதல்வர் ஸ்டாலின் பேசி இருக்கிறார். தி.மு.கவின் உள்ளூர் நி லைவரம் தொடங்கி பல விடயங்க ள் கலந்துரையாடப்பட்டுள்ளன. தேர்தல் பணிகள் நடத்தப்பட்ட விதத்தை அவர் பாராட்டியுள்ளார்.

இது போக தேசிய அளவில் இந்தியா கூட்டணி வெற்றிபெற்றால் தமிழ்நாட்டில் இருந்து 34 அமைச்சர்கள் வர வேண்டும். பெரிய துறைகளை நாம் எடுக்க வேண்டும். யாரை அமைச்சர் ஆக்கலாம். யாருக்கு வாய்ப்பு கொடுக்கலாம் என்றும் ஸ்டாலின் ஆலோசனைகளை செய்து இருக்கிறாராம்.




### உறவுக்கும் உதவிக்கும் அர்த்தம் கற்பிக்கும்

# அன்னை மரியாள்-எலிசபெத் சந்திப்புத் திருவிழா

கத்தோலிக்கத் திருச்சபையானது அன்னை மரியாள் எலிசபெத்தைச் சந்தித்த நிகழ்வை எதிர்வரும் 31ஆம் திகதி திருவிழாவாகக் கொண்டாடுகின்றது. இவ்விழாவானது கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டிலிருந்து கொண்டாடப்பட்டு வருகின்றது.

தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே ஆமென் என்று சொல்லும் போதே நம் உதடுகள் இரண்டும் சந்தித்துக் கொள்கின்றன. சந்திப்பு ஆம், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும், ஒவ்வொரு நொடியிலும் சந்திப்பு நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

மழை நிலத்தைச் சந்திக்கிறது; சூரியன் நம்மைச் சந்திக்கிறது; அன்றாடம் நிகழும் நமக்கிடையேயான சந்திப்புகள் இவ்வாறாக பல்வேறுபட்ட சந்திப்புகள் நிகழும் இப்பூமியில் பல தலைமுறைகளும் கொண்டாடி வரும் ஒரு சந்திப்புத் திருநாள்தான் நாம் கொண்டாடும் புனித கன்னி மரியாள் எலிசபெத்தைச் சந்தித்தல் திருநாள்.

இது வெறும் இருவரின் சந்திப்பு அன்று; இது யுகங்களின் சந்திப்பு; இது விசுவாசத்தின் சந்திப்பு; இது பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டின் சந்திப்பு. இது இரு கருவறைகளின் சந்திப்பு.



பழைய ஏற்பாட்டில் மீட்பின் வரலாற்றிலே கடவுள் தன் மக்களைச் சந்திக்க வருகிறார். அந்தச் சந்திப்பை மக்கள் மகிழ்ச்சியால் ஆடிப்பாடிக் கொண்டாடுகிறார்கள். தாவீது தன்னையும் மறந்து ஆண்டவரின் உடன்படிக்கை பேழை முன் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆடிப்பாடி சென்றார். அதேபோல இங்கு மரியாள் இயேசுவைத் தாங்கிய புதிய உடன்படிக்கை பேழையாக திகழ்கிறார்.

"பணிவிடை பெற அன்று, பணிவிடை புரியவே வந்தேன்" என்ற இயேசுவின் வார்த்தைக்கு மரியாள் உயிர் கொடுக்கிறார். இதோ இங்கு பணிவிடை புரிதலின் முன்னோடியாக மரியாள் தோன்றுகிறார். முதல் முறையாக இயேசுவுக்கு மட்டுமல்ல, இயேசுவின் வார்த்தைக்கும் உயிர் கொடுக்கிறார் மரியாள். இயேசுவின் தாரக மந்திரம் மரியாளில் செயல் வடிவம் பெறுகிறது.

வானதூதர் கபிரியேல் மரியாளுக்குத் தோன்றி, மங்கள வார்த்தை சொன்னபோது எலிசபெத் கருவுற்றிருக்கிறார் என்ற செய்தியையும் சொல்லிவிட்டுச் சொல்கிறார். எனவே மரியாள் தனது சொந்த ஊரான நாசரேத்திலிருந்து எலிசபெத்து இருக்கக்கூடிய அயின்கரிம் என்ற மலைநாட்டிற்குச் செல்கிறார். மரியாள் எலிசபெத்தைச் சென்று பார்க்கவேண்டும், அவருக்கு உதவவேண்டும் என்று யாரும் சொல்லவில்லை. ஆனாலும் மரியாள் விரைந்து சென்று எலிசபெத்துக்கு உதவுகிறார். இதுதான் நாம் மரியாளிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய பாடம். ஒருவரின் தேவையைக் குறிப்பால் அறிந்து, அவர் கேட்பதற்கு முன்பாகவே உதவிசெய்வதுதான் உண்மையான சேவையாக இருக்கும். மரியாள் இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றார்.

இன்றைக்கு நம்மிடத்தில் யாராவது ஒருவர் உதவி என்று வந்தாலும் அவர்களுக்கு உதவிசெய்ய நமக்கு மனம் வருவதில்லை. ஆனால் மரியாவோ கேளாமலே உதவிசெய்ய விரைகின்றார்.

தேவையில் இருக்கும் ஒருவருக்கு நாம் உதவி செய்கின்றபோது உண்மையில் நாம் கடவுள்தான்/ கடவுளின் பணியாளர்கள்தான்.

இந்த விழா நமக்கு உணர்த்தும் இரண்டாவது பாடம்: கடவுள் நம் நடுவில் இருக்கிறார் என்பதாகும். இறைவாக்கினர் செப்பானியா புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட வாசகத்தில் "உன் கடவுளாகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கிறார்; அவர் மாவீரர்; மீட்பு அளிப்பவர்; உன் பொருட்டு அவர் மகிழ்ந்து களிகூருவார்.." என்று வாசிக்கின்றோம்.

ஆம், கடவுள் இம்மானுவேலனாய் நம் மத்தியில் குடிகொண்டிருக்கிறார். அதன்வழியாக நமது துன்பங்கள், வேதனைகள், நோய்நொடிகள் அத்தனையும் போக்குகின்றார். நற்செய்தியில்கூட இயேசுவை மடிசுமந்த அன்னை மரியாள், எலிசபெத்தை வாழ்த்துகின்ற போது, எலிசபெத்தின் வயிற்றிலிருந்த குழந்தை அக்களிப்பால் துள்ளுகிறது. அதாவது இயேசுவின் இருப்பு அங்கே மகிழ்ச்சியைக் கொண்டுவந்தது என சொல்லலாம்.

**எல்.எஸ்.**

## அருங்கொடை செபக்குழுவின் தூய ஆவியானவர் பெருவிழா



அருங்கொடை மறுமலர்ச்சி இயக்க செபக் குழுவினர் ஏற்பாடு செய்திருந்த தூய ஆவியானவர் பெருவிழா கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியாஸ் பேராலயத்தில் நடைபெற்றது. கொழும்பு உயர்மறை மாவட்ட துணை ஆயர் பேரருட்திரு அன்டன் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் திருவிழா சிறப்புத் திருப்பலி நிறைவேற்றப்பட்டதையும் திருப்பலி உள்ளிட்ட நிகழ்வுகளில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

# மூவொரு கடவுள் எனும் மறைபொருள்

கத்தோலிக்கத் திருச்சபை இவ்வார ஞாயிறன்று மூவொரு கடவுள் திருவிழாவை சிறப்பித்தது.

நாம் நம் கடவுளை மூவொரு இறைவன் என்று கொண்டாடி மகிழ்கின்றோம். இந்த மறைபொருள் பற்றி புனித அகுஸ்தினார் சிந்தித்துக் கொண்டே கடற்கரையில் நடந்துகொண்டிருந்தபோது, அங்கே தோன்றிய குழந்தை, 'கடல் தண்ணீரை ஒரு சிறிய குழிக்குள் நிரப்ப முயல்வது எவ்வளவு மதியீனம்!' என்று கேட்டுவிட்டு மறைந்ததாகச் சொல்லப்படுவதுண்டு.

ஆனால், புனித அகுஸ்தினாரைத் தவிர வேறு யாரும் இந்த மறைபொருள் பற்றி அதிகம் பேசவில்லை. பேசிய மற்றவர்கள் எல்லாம் அகுஸ்தினார் பேசியதைத்தான் வேறு வார்த்தைகளில் சொன்னார்கள்.

அகுஸ்தினார், 'அன்பு' என்ற உணர்வை இங்கே ஓர் உருவகமாகக் கையாண்டு மூவொரு கடவுளின் பொருளைப் புரிந்து கொள்ள விழைகின்றார்.

அன்பில் மூன்று பகுதிகள் உள்ளன: (அ) அன்பு செய்பவர், (ஆ) அன்பு செய்யப்படுபவர், (இ) இருவருக்கிடையே பரிமாறப்படும் அன்பு. அன்பு என்ற ஒன்றே இந்த மூன்று பகுதிகளையும் இணைத்தாலும் மூன்றும் தனித்தனியாக இருக்கின்றன என்பதை நாம் மறுப்பதில்லை.

மூவொரு கடவுள் பற்றிய புரிதலில் இதுவே முதன்மையானது.இவர்கள் மூவரும் ஒன்று என்றாலும் இவர்கள் வேறு வேறான நபர்கள்.

அகுஸ்தினார் இயேசுவின் திருமுழுக்கு நிகழ்வு பற்றி ஓரிடத்தில் மறையுரை யாற்றிய போது,இயேசுவின் திருமுழுக்கு நிகழ்வில், 'மகன் வேறு,' 'தந்தை வேறு,' 'தூய ஆவியார் வேறு' என்று நம்மால் எளிதில் பிரித்துப் பார்க்க முடியும். மகன் தண்ணீருக்குள் இருக்கிறார். தந்தை வானத்தில் இருக்கிறார். தூய ஆவியார் இரண்டுக்கும் நடுவில் ஆகாயத்தில் இருக்கிறார். மூன்று பேரும் தனித்தனியாக அவர்கள் பிரிந்துதானே இருக்கிறார்கள்.

அப்படி இருக்க, அவர்கள் எப்படி ஒரே கடவுள் என்றும் பிரிக்க இயலாதவர்கள் என்றும் சொல்ல முடியும்? என்று அவருடைய மூளை கேள்வி கேட்கிறது. இந்த இடத்தில் அவர் இன்னொரு உருவகத்தைக் கண்டுபிடிக்கின்றார்: நினைவு, புரிதல், விருப்பம்.

ஒரு கதையை நாம் நினைவில்கொள்ள வேண்டுமெனில் அந்தக் கதையைப் புரிந்து கொள்ளவும் நினைவில் வைத்திருக்க விருப்பம் கொள்ளவும் வேண்டும். ஒரு கதையைப் புரிந்துகொள்ள வேண்டுமெனில் அவற்றின் வார்த்தைகளை நினைவில்கொள்ளவும் அவற்றை எண்ணிப்பார்க்க விருப்பம் கொள்ளவும் வேண்டும்.



ஒரு கதையை நாம் விரும்ப வேண்டுமெனில் அதை நினைவில் கொள்ளவும் புரிந்துகொள்ளவும் வேண்டும். மூன்றையும் செய்யக் கூடியது மூளைதான். ஆனால், மூன்றையும் வேறு வேறு செயல்களாகச் செய்கிறது. ஆக, அவற்றைப் பிரிக்க முடிவது போலத் தெரிந்தாலும் பிரிக்க இயலாதவையாக அவை இருக்கின்றன. அது போன்றுதான் கடவுளும், தந்தை மகன்தூய ஆவியாரும் என்கிறார் அகுஸ்தினார்.

மூவொரு கடவுள் மறைபொருளை நாம் எப்படிப் புரிந்துகொள்வது? மூவொரு கடவுள் தங்களிலேயே உறவு நிலையில் இருக்கின்றார்கள் என்றும் அவர்களுக்கென்று ஒவ்வொருவருக்கும் ஒரு பணி இருக்கிறது என்றும் வரையறுக்கிறது நம் கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி.

மூவொரு கடவுளைப் பற்றிய புரிதலை இயேசுவே நமக்குத் தருகிறார்:(அ) தந்தை வெளிப்படுத்துகிறார்: 'விண்ணகத்திலுள்ள என் தந்தையே வெளிப்படுத்தியுள்ளார்' (மத். 16:17)

(ஆ) மகன் விடுதலை தருகிறார்: 'மகன் உங்களுக்கு விடுதலை அளித்தால் நீங்கள் உண்மையிலேயே விடுதலை பெற்றவர்களாய் இருப்பீர்கள்' (யோவான் 8:36)

(இ) தூய ஆவியார் வழிநடத்துகிறார்: 'தூய ஆவியார் வரும்போது முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்' (யோவான் 16:13)

ஞாயிறு முதல் வாசகத்தில் கடவுள் இஸ்ரயேல் மக்களுக்கு மிக நெருக்கமாக வந்ததையும், அவர்களுக்கு அரும்பெரும் செயல்கள் நடத்தி அவர்களை மீட்டதையும் எடுத்துரைக்கிறார் மோசே.

தூய ஆவியார் நம் உள்ளத்தின் குரலாக அமர்ந்துகொண்டு கடவுளை, 'அப்பா, தந்தையே' என அழைக்கிறார். தம் திருத்தூதர்களைப் பணிக்கு அனுப்புகிற இயேசு, 'தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால்' என கடவுளுக்குப் பெயரிடுகிறார்.

தன் சகோதரன் ஏசாவிடமிருந்து தப்பி ஓடுகிற யாக்கோபு பெத்தேலில் கனவு கண்டபோது, 'உண்மையாகவே ஆண்டவர் இவ்விடத்தில் இருக்கிறார். நானோ இதை அறியாதிருந்தேன்' (தொநூ 29:16) என்றார்.

பின்னர் ஏசாவுடன் ஒப்புரவாகிற நிகழ்வில், 'உமது முகத்தைக் காண்பது கடவுளின் முகத்தைக் காண்பதுபோல இருக்கிறது' (தொநூ 33:10) என்கிறார். ஒரு பக்கம் கடவுளின் இருத்தலை நாம் அறியாமல் இருக்கிறோம். இன்னொரு பக்கம் அனைவரிலும் அனைத்திலும் கடவுளைக் காண்கிறோம்.

கடவுள் என்பவர் நமக்கு ஓர் அனுபவமாக இருக்கிறார். இரண்டாவதாக, 'எப்படி மூவொரு கடவுள்?' எனக் கேட்பதை விடுத்து, 'ஏன் மூவொரு கடவுள்?' என்று நாம் கேள்வியை மாற்றிக் கேட்க வேண்டும். கடவுள் பற்றிய மறையுண்மை பற்றிய புரிதல்களில் எப்படி என்னும் கேள்வியை விட ஏன் என்ற கேள்விக்கு மட்டுமே விடை உண்டு.

மூவொரு இறைவன் உறவின் இறைவனாக இருக்கிறார். அவருடைய சாயலில் படைக்கப்பட்டுள்ள நாம் உறவுக்குப் படைக்கப்பட்டுள்ளோம்.

மூன்றாவதாக, இந்த உறவு நம் ஒன்றிப்பிலும் மலர்கிறது. அன்பு, ஒன்றிப்பு, மாண்பு என்ற நிலையில் ஒருவர் மற்றவரோடு உறவாடுகிற குழுமம் மூவொரு இறைவனைப் பிரதிபலிக்கிறது.

இந்த நாள் 'மறைபொருள்' ஏனெனில், இந்த மறைபொருளில் நாமும் பங்கேற்கிறோம்.

**அருட்பணி யேசு கருணாநிதி**

### -இவ்வார புனிதர்-

# ஆன்மீக வாழ்வுக்கு வழிகாட்டிய பெருமைக்குரிய புனிதர் பிலிப்பு நேரியார்

கத்தோலிக்கத் திருச்சபை மறைசாட்சியான புனிதர் பிலிப்பு நேரியாருக்கு இவ்வாரத்தில் விழாவெடுத்து மகிழ்கிறது.

இவர் இத்தாலியில் பிளாரன்ஸ் நகரில் பிறந்தவர். 26 வயதாகும்போது வணிகத் தொழிலை விட்டு விட்டு, தமது ஆன்மீக நலனைக் குறித்தும் மற்றவர்களின் ஆன்மீக ஈடேற்றத்தை முன்னிட்டும் உரோமை நகர் சென்றடைந்தார்.



தத்துவக்கலை, வேதக்கலை பயின்றதோடு, ஜெபத்திலும் தவ முயற்சிகளிலும் தம்மை மிகவும் ஈடுபடுத்திக்கொண்டார். அந்நகரில் 12 மைல் சுற்றளவில் இருந்த புகழ்மிக்க ஏழு தேவாலயங்களையும் மாலையானதும் நடந்தே சந்திக்கும் முயற்சியில் ஈடுபட்டு, இரவில் புனித செபஸ்தியாரின் புதைகுழி வளாகத்தில் தங்குவார்.

மேலும் நலிவுற்ற மக்களின் நலன்களைக் கருதி மருத்துவமனைகளில் நோயாளிகளைச் சந்திப்பார். தெரு வழியாகச் செல்லும்போது ஆன்மீகத்தில் அக்கறையற்றவர்களை இனங்கண்டு, தமது திறமையான பேச்சினாலும் அணுகுமுறைகளினாலும் அவர்கள் இறைவன் பக்கம் மனம்மாறச் செய்வார். இந்த அனுபவமானது, கி. பி. 1548 இல் தமது குறிக்கோளை ஏற்றுக்கொண்டவர்களை ஒருங்கிணைக்கவும், திவ்ய நற்கருணை ஆராதனை பக்தி முயற்சிகளைத் தொடங்குவதற்கும் புனிதரைத் தூண்டியது. இவ்வாறு 10 ஆண்டுகள் உருண்டோடின.

இவரின் ஆன்மகுரு இவரைக் குருத்துவத்தை நாடப் பணித்தார். குருப்பட்டம் பெற்றபின் 33 ஆண்டுகளாக ஓரட்டரி என்று அழைக்கப்படும் செபக் குழுவைப் பல குருக்களைச் சேர்த்துக்கொண்டு நடத்தினார். ஏராளமான ஞானப் பயன் கிடைப்பதைக் கண்டு மகிழ்ந்தார். இவர்களே ஓரட்டோரியன்ஸ்"ஜெபக் குழுவினர்" என்று இந்நாள்வரை போற்றப்படுகின்றனர்.

நாள்தோறும் இவரிடம் ஒப்புரவு அருட்சாதனம் பெறவும் ஆன்மீக ஆலோசனை பெறவும், தொழிலாளர் பலர் பணிகளை முடித்த பின் வந்த வண்ணம் இருந்தனர். கர்தினால்கள் பலரும் குருக்களும் இவரது ஆலோசனையை நாடி வந்தனர்.

இவர் திருப்பலி நிறைவேற்றும் போதெல்லாம் பரவசத்தில் ஆழ்ந்து விடுவார். இளைஞர்கள் பலரை ஆன்மீக வாழ்வுக்குக் கொண்டு வந்து சேர்த்தார். எப்போதும் மகிழ்ச்சியாயிருக்கவும், ஆழமான இறை அனுபவம், தாழ்ச்சி, ஒறுத்தல் ஆசைகளைக் கட்டுப்படுத்துதல், அடிக்கடி ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெறுதல் ஆகியவற்றில் தம்மிடம் வந்தவர்களுக்கு பயிற்சி அளித்தார்.

சிலருக்கு மற்றவர்களின் நற் பெயரைக் கெடுக்கும் பழக்கம் இருந்ததைக் கண்டு, அவர்களைத் திருத்தும் பணியில் ஈடுபட்டார்.

இவரை "உரோமை நகரின் இரண்டாம் அப்போஸ்தலர்" என அழைக்கின்றார்கள். இது இவருக்கு மிகப் பொருத்தம். நாள்தோறும் பிலிப்பு வைகறையில் தாழ்ச்சியுடன் எழுப்பிய மன்றாட்டு, "ஆண்டவரே, பிலிப்பை உமது அருட்கரம் கொண்டு நடத்தும், இல்லாவிட்டால் பிலிப்பு உம்மைக் காட்டிக்கொடுத்து விடுவான் என்பதாகும்.

**எல்.மிலியன் ஜேம்ஸ்**

## வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கு...

"உறுமய" வேலைத்திட்டத்தின் கீழ் வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கு 5,400 முழு உரிமையுள்ள காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக வே இந்த காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி: விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டத்தின் ஆரம்பகட்ட முன்னெடுப்பாக உறுமய காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் எதிர்வரும் மூன்று வருடங்களில் நவீன விவசாயத்தை கிராமத்துக்கு கொண்டு செல்லவுள்ளோம்.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் மக்கள் தமது வருமானத்தை அதிகரிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்த முடியும்.

மக்களுக்கு முழு உரிமையுள்ள காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவது அரசாங்கத்திற்கு சொந்தமான சொத்துக்களை தனியார் மயமாக்குவதாகும். இது நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு நேரடியாகப் பங்களிக்க முடியும்.

1935 முதல், மக்களுக்கு விவசாயம் செய்யவும் வீடு கட்டவும் காணிகளின் உரிமம் வழங்கப்பட்டது. ஆனால் நிலத்தின் முழுமையான உரிமை வழங்கப்படவில்லை. தற்போது முழு உரிமையுடன் காணி உறுதிகளை வழங்க முடிவு செய்தேன். இவ்வாறு முழு உரிமையுடன் காணி உறுதிப் பத்திரம் வழங்கினால் மக்கள் நிலத்தை விற்றுவிடுவார்கள் என்று பலர் கூறினர்.

இரண்டு தலைமுறைகள் அனுபவித்த நிலத்தை நீங்கள் விற்க மாட்டீர்கள் என நம்புகிறேன்.

கடந்த காலங்களில் கொவிட்19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடியால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். அந்த நெருக்கடியால் நாட்டில் சுமார் எழுபது சதவீத மக்களின் சொத்து மதிப்பு வீழ்ச்சியடைந்தது. இன்று வழங்கப்படும் காணி உறுதியினால் மக்களின் சொத்து மதிப்பு உயரும்.

இந்த நிலங்களைப் பயன்படுத்தி நவீன விவசாயத்தை உருவாக்க பங்களிக்க வேண்டும். இதனூடாக நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்திற்குப் பங்களிக்க முடியும். நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும்போது, நீங்கள் செய்யும் மிகப்பெரிய பங்களிப்பாக இது இருக்கும்.

மல்வத்து ஓயா திட்டம் நிறைவடைந்ததன் பின்னர், மன்னார் மாவட்டத்தில் பயிர்ச்செய்கையை இதனைவிட இலகுவாக மேற்கொள்ளமுடியும் இவ்வாறு தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான்:

வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட மக்களுக்கு காணி உறுதி வழங்கப்படும் இந்த நாள் பொன்னான நாளாகும். ஆளணிப் பிரச்சினை இல்லாவிட்டால் மேலும் பலருக்கு இந்த உறுதி வழங்க முடியும். இது ஒரு நீண்ட செயற்பாடாகும். எதிர்காலத்தில் இதனைவிடத் துரிதமாக காணி உறுதி வழங்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. தூர நோக்குடன் ஜனாதிபதி செயற்பட்டு வருகிறார். அடுத்த வருடமும் நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க இருக்க வேண்டும். அவரின் கரத்தை நாம் பலப்படுத்த வேண்டும்.

மன்னார் மாவட்ட மக்களும் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அவற்றுக்கும் தீர்வு வழங்க வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்:

வடக்கில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்தது தொடர்பில், ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கிறோம். காணி உறுதி வழங்குவதன் ஊடாக இப்பகுதி மக்களுக்கு விடிவு காலம் கிடைத்துள்ளது. இது போதுமானதல்ல. 20 இலட்சம் காணி உறுதி வழங்கப்படுமானால் வன்னியில் காணிஉறுதி அற்ற எவரும் எஞ்சமாட்டார்கள். பிரதமராக இருந்த போது நெதர்லாந்து அரசாங்கத்தின் உதவியுடன் தொழில்நுட்பத்துடன் கூடிய ஆஸ்பத்திரிகளை நிர்மாணிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார். அவற்றை திறந்து வைத்தது தொடர்பில் எமது நன்றியை தெரிவிக்கிறோம்.

ஜனாதிபதி மன்னாருக்கு விஜயம் செய்யாத போதும் மன்னாரில் உள்ள பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தி அவற்றுக்குத் தீர்வு காண வேண்டும். காணி உறுதி பெற்றவர்கள் அவற்றை முறையாகப் பயன்படுத்துவார்கள் என்று நம்புகிறோம்.

## வடக்கு மக்களின்...

அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு பயந்து பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருவதாகவும் அவர் கூறினார்.

வவுனியாவில் இடம்பெற்ற உறுமய வேலைத் திட்டத்தின் கீழ் வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட மக்களுக்கான காணி உறுதிப்பத்திரங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

வவுனியா மோஜோ மண்டபத்தில் நேற்று முன்தினம் (26) நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றைய தினம் வன்னி பிரதேச மக்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான நாளாகும். இவ்வாறான நாள் வரும் என்று நாங்கள் கனவிலும் கூட நினைக்கவில்லை. இரண்டு வருடங்களுக்கு முன்பு நாம் எப்படி இருந்தோம் என்பது அனைவருக்கும் நன்கு தெரியும். வீடுகளுக்கு தீ, வைக்கப்பட்டன. அரசியல்வாதிகள் தாக்கப்பட்டனர். முன்னாள் ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டது. இவ்வளவு மோசமான நிலையில் இருந்த நாட்டை பொறுப்பேற்று, நடத்த எவரும் முன்வரவில்லை. சிலர் வன்முறையில் ஈடுபட்டனர். .

இவ்வாறான நிலையில் நாட்டைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்டுவருகிறார். சிவப்பு நிற சுவரொட்டிகள் தற்போது எங்கும் ஒட்டப்பட்டுள்ளன. சுவரொட்டிகளை ஒட்டாமல், கூட்டங்களை நடத்தாமல் நாட்டை பொறுப்பேற்றிருந்தால் இன்று நாட்டின் வளர்ச்சிக்காக பலவற்றை செய்திருக்க முடியும். ஆனால் அவர்களால் அதைச் செய்ய முடியவில்லை. எதையும் ஏற்கும் ஆளுமை ரணில் விக்கிரமசிங்கவுக்கு மட்டுமே உண்டு.

20 லட்சம் பேருக்கு காணி உரிமையை வழங்குவது என்பது எளிதான காரியம் அல்ல. வன்னிப் பிரதேச மக்களே யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டனர். வடமாகாணத்தை அபிவிருத்தி செய்யும் ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தின் மூலம் இந்த வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் அதிக நன்மைகளைப் பெறுவார்கள் என்பது உறுதி.

வடக்கு மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக ஜனாதிபதி பல சுற்று கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அது நன்கு தெரியும். கடந்த தைப்பொங்கல் தினத்திற்கு முன்னர் ஜனாதிபதி வவுனியா பிரதேசத்திற்கு விஜயம் செய்தார். வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் பெரும்பாலான காணிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் உள்ளன. பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்து வந்த நிலங்களுக்குச் செல்லக்கூட முடியாமல் மக்கள்,கைது செய்யப்பட்டனர். எந்தவொரு ஜனாதிபதியும் இந்த பிரச்சினைக்கு தீர்வு வழங்கவில்லை.

ஆனால் 1985 ஆம் ஆண்டு காணி சட்டத்தின் பிரகாரம் இந்த காணிகளை விடுவிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டார். இதன்படி வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வன பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் உள்ள ஆயிரக்கணக்கான காணிகளை விடுவிக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## நாட்டின் பொருளாதார...

காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்தார்.

"Starlink" போன்ற திட்டத்தில் இணைவதன் மூலம் நாட்டின் பின்னடைந்த பிரதேசங்களுக்கு இணைய வசதிகளை பிரச்சினையின்றி வழங்க முடியும் எனவும் சுற்றுலாத்துறை உட்பட பொருளாதாரத்திற்கு பயன்படும் பல துறைகளின் வளர்ச்சிக்கு இது உறுதுணையாக இருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ருவன் விஜயவர்தன இதனைத் தெரிவித்தார்.

## சீரற்ற காலநிலை;...

நிலையத்தில் இடம்பெற்றது. இங்கு கருத்துரைத்த இராஜாங்க அமைச்சர் தெரிவித்ததாவது

கடந்த சில நாட்களாக பெய்த மழை மற்றும் பலத்த காற்று காரணமாக 20 மாவட்டங்களில் உள்ள 212 பிரதேச செயலாளர் பிரிவுகளில் வசிக்கும் 55406 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.பலத்த காற்று காரணமாக மரம் முறிந்து விழுந்ததில் 7 பேர் உயிரிழந்துள்ளனர் . வானிலை அவதான நிலைய தகவல்களின் அடிப்படையில் , தென்மேற்கு பருவமழை செப்டம்பர் மாதம் வரை நீடிக்கும். அனர்த்த முகாமைத்துவ நிலையம் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் , கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அரசநிறுவனங்களும், குறிப்பாக முப்படையினர், பொலிஸ், சிவில் பாதுகாப்பு திணைக்கள பணியாளர்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கும் நிவாரணம் வழங்குவதற்கும் தயார்நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## கரையை கடந்தது...

மற்றும் தென் மாகாணங்களில் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. அத்துடன் சப்ரகமுவ மாகாணத்திலும் நுவரெலியா மாவட்டத்தின் சில இடங்களிலும் நேற்று (27) 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்துள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும் வடக்கு, வடமத்திய, மேல், தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காற்று வீசலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்நிலயில், திருகோணமலை மாவட்டத்திலும் இடைக்கிடையே மணிக்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் 30 முதல் 40 கிலோமீற்றர் வரை ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வங்கக்கடலில் உருவான றீமால் புயல், நேற்று முன்தினம் இரவு மேற்கு வங்கம் மற்றும் வங்கக்கடலுக்கிடையே கரையை கடந்தது.

இந்தப் புயல் மேலும் வடக்கு மற்றும் வடகிழக்கு நோக்கி நகர்ந்து தீவிர புயலிலிருந்து, புயலாக வலுவிழந்துள்ளதாக இந்திய வானிலை மையம் தெரிவித்திருக்கிறது. இதனால், நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும். எனவே, இக்கடற்பரப்புகளில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

மன்னாரிலிருந்து கல்பிட்டி, கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டையூடான பொத்துவில் வரையான கடற்பரப்புகளில், கரையோரத்தை அண்டிய பகுதிகளில் கடல் அலைகள் 2.5 3.0 மீற்றர் உயரம் வரை மேலெழும்பக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

## மழையுடனான காலநிலை...

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 24,481 ஆகவும், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 09 ஆகவும் உள்ளது. மொத்த டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவ ர்களில் 36 வீதமானோர் மேல் மாகாணத்திலும், 18.1 வட மாகாணத்திலும், 8.9 மத்திய மாகாணத்திலும், 7.3 தென் மாகாணத்திலும், 9.4 வீதமாக சப்ரகமுவ மாகாணத்திலும் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் 5,244 பேர், யாழ்ப்பாணம்3,887 பேர், கம்பஹா 2,293 பேர், களுத்துறை 1,844 பேர், குருநாகல் 1,090 பேர், இரத்தினபுரி 1,272 பேர், காலி 1,156 பேர், கேகாலை 1,037 பேர், புத்தளம் 692 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

48 மணி நேரத்திற்கு மேல் காய்ச்சல் இருந்தால், டெங்கு என சந்தேகிக்கப்பட்டு தகுதியான மருத்துவரை அணுகி சிகிச்சை பெற வேண்டும். நுளம்புகள் உற்பத்தியாகாத வகையில், சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்றும் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

## ரூ. 50 கோடி பெறுமதியான...

கைதானவர் 43 வயதுடையவராவார்.

இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட அம்பரின் பெறுமதி சுமார் ஐம்பது கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி நிதிய...

முடிவுத் திகதி ஜூன் மாதம் 07 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் மிக விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதனால் தகுதி பெற்றுள்ள மாணவ, மாணவிகள் தமது விண்ணப்பங்களை உரிய முறையில் நிரப்பி குறித்த திகதிக்கு முன்னர் பிரதேச கிராம உத்தியோகத்தர் மற்றும் செயலாளரின் பரிந்துரையுடன், வகுப்பாசிரியர், பாடசாலை அதிபர், மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரையுடன் செயலாளர், ஜனாதிபதி நிதியம், இலக்கம் 35, மூன்றாம் மாடி, லேக் ஹவுஸ் கட்டிடம், டீ. ஆர் விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பிவைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தின் பெயர் மற்றும் பாடசாலை உள்வாங்கப்பட்டுள்ள கல்வி வலயத்தின் பெயரையும் குறிப்பிட வேண்டும்.

இந்த புலமைப்பரிசில் வேலைத் திட்டத்தின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் தினம் மே மாதம் 22 ஆம் திகதி முடிவடைந்துள்ள போதிலும், கடந்த சில நாட்களில் நிலவிய பல்வேறு நிர்வாகச் சிக்கல்கள் மற்றும் மோசமான காலநிலை காரணமாக விண்ணப்பங்களை அனுப்ப முடியாத மாணவர்கள் அதிகமானோரின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

## மாலைதீவு பிரஜைகளுக்கு...

பாதுகாப்பாக பயணிக்க முடியுமென்பதை உறுதி செய்ய, இலங்கை பிரதிநிதிகளுடன் மாலைதீவு வெளியுறவு அமைச்சு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

## நாட்டின் பிரஜைகளின்...

முதல் வழங்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சரென்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தார்.

இலங்கைப் பிரஜைகளின் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் வாகன உரிமைப் பரிமாற்றங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் அதிகாரிகள் பயன்படுத்தும் தகவல்களையும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துக்கு தொடர்ச்சியாக வழங்குமாறும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே, அவர் இவ்விடயத்தை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அது புதிய சட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதாக அமையாது.

வருமான வரி சட்டத்தின் 123 (8) சரத்துக்கு அமைய, வருமான வரி திணைக்களம் மூன்றாவது தரப்பினரின் தகவல்களை பெற்றுக் கொள்வதற்குள்ள உரிமையை செயற்படுத்துவது மாத்திரமே இதன் மூலம் இடம்பெறுமென சுட்டிக்காட்டியுள்ளார்.

## தமிழ் தரப்பு...

கடந்த சில தினங்களுக்கு முன்னர் என்னை நேரில் சந்தித்து கலந்துறையாடினர்.

பொது வேட்பாளர் தொடர்பிலான எனது நிலைப்பாட்டை அவர்களுக்கு கூறினேன்.

அவர்களும், பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பிலான தமது கருத்துக்களையும் கூறினர்.

பொது வேட்பாளர் தொடர்பில் பொது வெளியில் கருத்துக்களை பரிமாறும் நிகழ்வை நடத்தி, அதில் ஆரோக்கியமான கலந்துரையாடலை நடத்தலாமென நான், தெரிவித்திருந்தேன். அதற்கு அவர்களும் சம்மதித்தனர்.

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் (09) பொது வேட்பாளர் தொடர்பில் கருத்துக்களை பரிமாறும் நிகழ்வுக்கு ஏற்பாடு செய்துள்ளேன். அதில் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டாது, கருத்துக்களை முன் வைத்து ஆரோக்கியமான கருத்து பரிமாற்றம் நடைபெற்றால் மக்களுக்கும் தெளிவு கிடைக்கும். இதற்காகவே, இந்நிகழ்வை ஒழுங்கமைத்ததாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்தார்.

## ஈரான் ஜனாதிபதியின்...

ஈரான் ஜனாதிபதி உள்ளிட்ட பலரின் திடீர் மறைவு தொடர்பில் தாம், மிகுந்த மன வேதனையடைவதாகவ'ம், விசேடமாக இலங்கைக்கும் எம்மோடு தொடர்புடைய பிராந்தியத்துக்கும் அவரது மறைவு பாரிய இழப்பென்றும் பதிவேட்டில் அவர் குறிப்பிட்டுள்ளார். ஈரான், இலங்கையிடையில் நெடுங்காலமாக நட்பு நிலவுகிறது. இலங்கையின் அபிவிருத்திக்கு மறைந்த இப்ராஹிம் ரைசி, பல ஒத்துழைப்புகளை நல்கியுள்ளார். விசேடமாக உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்துக்கு ஈரான் அரசாங்கம் நிதியுதவி வழங்கியது. இதை நாம் ஒரு போதும் மறந்து விட முடியாது என, அமைச்சர் பதிவிட்டுள்ளார்.

# இன்றைய பலன்கள்

### (28.05.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:** முக்கியமான நண்பர்கள் இல்லாத காரணத்தால் சில செயல்கள் அரைகுறையாக பாதியிலேயே நிற்க நேரிடும்.

**ரிஷபம் :** சில செயல்களில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது. உத்தியோகத்தில் சிலருக்கு முக்கிய பொறுப்புக்கள் வந்து சேரும்.

**மிதுனம்:** எதிலும் கவனம் தேவை. இருந்த போதும் நீங்கள் முயற்சி செய்த செயல்கள் சிலவற்றில் வெற்றி கிடைக்கும்.

**கடகம்:** புதிய ஒப்பந்தங்களில் கவனம் தேவை. காரியங்கள் பலவற்றில் முன்னேற்றம் காண்பீர்கள். உத்தியோகத்தில் அலுவலகங்கள் சிலருக்கு புதிய பொறுப்புக்கள் கிடைக்கும்.

**சிம்மம்:** உத்தியோகத்தில் சக நண்பர்களிடம் உங்கள் மதிப்பு உயரும். அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அதன் மூலம் சில சலுகைகள் பெறுவீர்கள்.

**கன்னி:** உத்தியோகத்தில் சிலருக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். பிறகு செய்யலாமென்று தள்ளி வைத்த வேலையை உயரதிகாரிகளின் விருப்பப்படி உடனே செய்ய வேண்டியதிருக்கும்.

**துலாம்:** முக்கியமான செயல்களில் அதிக முயற்சி செய்து வெற்றிகளை அடைவீர்கள். தளர்வடையும் செயல்களில் தகுந்த நண்பர்களின் உதவியோடு முன் நின்று முன்னேறுவீர்கள்.

**விருச்சிகம்:** எடுத்த செயல்களில் வெற்றி பெற சலிக்காமல் முயற்சி மேற்கொள்வீர்கள். சில காரியங்கள் உங்கள் எண்ணபடி நடைபெறாமல் போகலாம்.

**தனுசு:** அவசியமான செயல்களில் முயற்சிகளை அதிகமாக்குவீர்கள். சிலவற்றில் முன்னேற்றமான பலன்கள் கிடைத்தாலும் சில காரியங்களில் தளர்வு ஏற்படக்கூடும்.

**மகரம்:** தீவிரமான முயற்சிகளுடன் சில செயல்களில் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். நினைத்தபடி வேலைகளை செய்ய முடியாமல் தடங்கல்கள் ஏற்படலாம்.

**கும்பம் :** செய்யும் செயல்களில் தீவிரம் முயற்சியோடு செயல்பட்டு வெற்றி அடைவீர்கள். காரியங்களில் தடை தாமதங்கள் ஏற்பட்டாலும் அவற்றை முறியடித்து முன்னேறுவீர்கள்.

**மீனம்:** உங்கள் முயற்சிகள் பலவற்றில் வெற்றிகரமான போக்கு காணப்படும். தளர்வடைந்த காரியங்களில் தீவிர முயற்சியுடன் செயல்பட்டு வெற்றி பெறுவீர்கள்.

## அரச, அரசு துறை வேலை... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்று சம்பளம் பெறும் சகல உத்தியோகத்தர்களும் தொகை மதிப்புக்குட்படுத்தப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். தொகை மதிப்பு முடிவடைந்ததும் அனைத்து ஆவணங்களையும் உரிய திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் உயரதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரஷ்யா, மியன்மாரிலுள்ள... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று பௌத்த பீடங்களின் கோரிக்கைகள் அடங்கிய கடிதங்களையும் இக்குழுவினர் கொண்டு சென்றுள்ளனர்.

தாய்லாந்து மற்றும் மியான்மார் பௌத்த பீட தலைவர்கள் மற்றும் ரஷ்யாவின் தூதரக அதிகாரிகளிடம் இக்கடிதங்கள் கையளிக்கப்படவுள்ளன.

## தரம் 05... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜூன் (14)நள்ளிரவு 12 மணிக்குப் பிறகு இணையவழி விண்ணப்பங்களை ஏற்பது நிறுத்தப்படும். விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி எக்காரணம் கொண்டும் நீட்டிக்கப்படமாட்டாது.

அரசாங்க பாடசாலைகள் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளில், தரம் ஐந்தில் கல்வி கற்கும் மாணவர்கள் மட்டுமே புலமைப்பரிசில் பரட்சைக்கு தோற்ற முடியும். www. onlineexams.gov.lk என்ற இணையத்தளத்துக்குச் சென்று விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். இது தொடர்பில் சிக்கல்கள் இருப்பின், பரீட்சை திணைக்களத்தின் 1911 அல்லது 0112 784537 அல்லது 0112 786616 அல்லது 0112 784208 என்ற அவசர இலக்கங்களுக்கு அழைத்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமென சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஜனநாயகத்தின் மீது... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதயங்களிலும், கலாசாரத்திலும் ஏற்றுக்கொள்ள வேண்டும். எதையும் சரியாகப் பார்க்க வேண்டும். நான், துணை சபாநாயகராக இருப்பதால், நாடாளுமன்றத்தில் பல விஷயங்கள் நடைபெறுவதை பார்க்கிறேன்.

நான் காலை 9.30 மணிக்கு பாராளுமன்றத்திற்கு சென்று பாராளுமன்றத்தின் கதவை மூடிய பின்னரே வெளியே வருவேன். சில எம்பிக்கள், சபையில் ஐந்து முதல் பத்து நிமிடங்கள் மட்டுமே இருப்பர். இவ்வாறானவர்கள் சமூகத்தில் பெரிய வீரர்களாக காட்டிக் கொள்வர். எமது பாராளுமன்றத்தில் எழுபத்தைந்து சட்டங்கள் நிறைவேற்றப்பட்டதாக ஜனாதிபதி கூறியதைக் கேட்டேன். இக்கால கட்டத்தில் பாராளுமன்றத்தில் பல சம்பவங்கள் நடந்தன அதற்கு ஒரு காரணம் போராட்டத்தின் பின்னர் சமூகத்தில் பல கலா சார மாற்றம் ஏற்பட்டதாகும். விரைவாக எடுக்க வேண்டிய முடிவுகள் விரைவாக எடுக்கப்பட்டன. ஆனால் எமது சமூகம் சிலவற்றை தவறாகவே எடுத்துக் கொண்டது.

## பொதுத் தேர்தல் நடத்த...

ரணில் விக்கிரமசிங்க அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

இந்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலுக்காக மட்டும் 1,000 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதி முழுக்க முழுக்க ஜனாதிபதி தேர்தலை நடத்தும் நோக்கில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டால், பொதுத் தேர்தல் நடத்துவதற்காக நிதியை ஒதுக்கீடு செய்ய முடியாது. ஜனாதிபதியால் மட்டுமே இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்ய முடியும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதேவேளை, முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமென அண்மையில் ஜனாதிபதி அமைச்சரவைக்கு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நோயாளிகளுக்கு பரிமாறும்...

மருத்துவமனை சமையலறையில் உணவு தயாரிக்கும் சமையற்காரர்களுக்கு பிரத்தியேக ஆடைகளை வழங்கி புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாக அவர் கூறினார்.

நோயாளிகளை அழைத்து உணவு வழங்குவதற்குப் பதிலாக, தயாரிக்கப்பட்ட உணவை நோயாளிகளிடமே எடுத்துச் சென்று அவர்களுக்கு உணவு வழங்க சிறப்பு உடைகள் அணிந்தவர்கள் பணியில் அமர்த்தப்படுவரென்றும் அவர்தெரிவித்தார்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, ஒரு நோயாளிக்கு ஒதுக்கப்படும் நிதியை அதிகரிக்க, சுகாதார அமைச்சு விருப்பம் தெரிவித்துள்ளது. மீதமுள்ள தொகையை பரோபகாரிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் கூறினார்.

இத்திட்டத்துக்கு ஆதரவளிக்க விரும்பும் தொண்டு நிறுவனங்கள் இருந்தால், அரசாங்க மருத்துவமனைகளிலுள்ள Nutrition Doctors Association பிரதிநிதிகளை சந்தித்து மேலதிக தகவல்களைப் பெறலாம் என்றும் அவர் கூறினார்.

# கிழக்கின் குரல்





கிழக்கு மாகாணத்தில் விவசாயத்தை மேம்படுத்த உழவு இயந்திரங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்குட்பட்ட பகுதிகளில் திண்மக் கழிவுகளை அகற்றல், விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தல் என்பற்றை ஆளுநர் செந்தில் தொண்டமானால் இயந்திரங்கள் மற்றும் உழவு இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ் ரத்நாயக்க, ஆளுநரின் செயலாளர் எல்.பி மதநாயக்க, உள்ளூராட்சி திணைக்கள ஆணையாளர் மணிவண்ணன், விவசாய அமைச்சின் செயலாளர் முத்துபண்டா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாய உற்பத்திகளை அதிகரிக்க நடவடிக்கை

### புலுட்டுமானோடை, இரைச்சகல் குளங்களை பார்வையிட இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் விஜயம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாய உற்பத்திகளை அதிகரிக்கும் பொருட்டு பல மில்லியன் செலவில் முன்னெடுக்கப்பட்டு வரும் புலுட்டுமானோடை குளம், இரைச்சகல் குளம், வெப்பத்தாவெளி குளம், குறுக்கனாமடு அணைக்கட்டு போன்றவற்றுக்கு இராஜாங்க அமைச்சர் சிவ. சந்திரகாந்தன் அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்தார். இதன்போது அங்குள்ள நிலைமைகளை அவர் கண்காணித்தார்.

'காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன திட்டம்' எனும் கருத்திட்டத்துக்கமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உலக வங்கியின் நிதியுதவி ஊடாக இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் கடந்த காலங்களில் விவசாய நீர்ப்பாசன மேம்பாட்டு பணிகள் பொருளாதார நெருக்கடி,வனவள பரிபாலன திணைக்களம் மற்றும் தொல்லியல் திணைக்களம் உள்ளிட்ட திணைக்களங்களின் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் தாமதமாக இத்திட்டம் நடைபெற்று வந்தது.





இதனையடுத்து இராஜாங்க அமைச்சர் சிவ. சந்திரகாந்தன் தலைமையில் கடந்த மே மாதம் 11 திகதி மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இத்திட்டம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கூட்டம் நடைபெற்றது.

அதன்பிரகாரம் இத்திட்டத்தில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக புலுட்டுமானோடை குளம், இரைச்சகல் குளம், வெப்பத்தாவெளி குளம் குறுக்கனாமடு அணைக்கட்டு போன்ற வேலைத்தளங்களுக்கான நேரடி கள விஜயத்தில் இராஜாங்க அமைச்சர் ஈடுபட்டிருந்தார். இதன்போது குறித்த பணிகளை நிறைவு செய்வதற்கு தடையாகவுள்ள விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கான பணிப்புரைகளை வழங்கியிருந்தார்.

பருவமழை ஆரம்பிப்பதற்கு முன்னர் இத்திட்டத்தை நிறைவுசெய்வதற்கு முனைப்பான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு துறைசார் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

இதில் புலுட்டுமானோடை மற்றும் இரைச்சகல் குளங்களின் மேலதிக நீர் கொள்ளளவை அதிகரிக்கும் பொருட்டு 113.7 மில்லியன் செலவில் குளக்கட்டை புனரமைத்தல், கால்வாய் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதோடு, மேலதிக நீரை வெளியேற்றுவதற்கான வான் கதவுகள் அமைத்தல் போன்ற பணிகளும் நடைபெற்று வருகிறது. அத்தோடு இரைச்சகல் குளத்தின் குளக்கட்டை மேலும் நீளமாக்குதல் தொடர்பான பணிகளும் நடைபெற்று வருகிறது.

கள விஜயத்தின் போது நீர்ப்பாசன மாகாண பணிப்பாளர் இராஜகோபாலசிங்கம் செங்கலடி பிரதேச செயலாளர் தனபாலசுந்தரம், கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர் ஜெகன்நாத், காலநிலை சீராக்கல் மாகாண திட்ட பணிப்பாளர் ஆரியதாஸ, மட்டக்களப்பு மாவட்ட செயலக பதில் திட்டமிடல் பணிப்பாளர் சதீஸ்குமார், மட்டக்களப்பு மாவட்ட செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் நவநீதன், மட்டக்களப்பு மாவட்ட, மாகாண நீர்ப்பாசன, பொறியியலாளர்கள், வட்டார வனவள அதிகாரிகள், எமது கட்சியின் பிரதம பொருளாளர் ஆ. தேவராசா, மாவட்ட அமைப்பாளர் அருண் திருநாவுக்கரசு, கிராம உத்தியோகத்தர்கள்,கமநல அமைப்பு தலைவர்கள், விவசாயிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## வழுக்குமரம் ஏறும் போட்டியில் பங்கேற்றவர் பரிதாப மரணம்!

### பேத்தாழை கருங்காலிச்சோலையில் சம்பவம்

**(வாழைச்சேனை தினகரன் நிருபர்)**



கல்குடா பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பேத்தாழை கருங்காலிச்சோலை கிராமத்தில் இயங்கி வரும் 'ஸ்ரீ கிருஸ்ணா இளைஞர் விளையாட்டுக் கழகத்தினால் ஒவ்வொரு வருடமும் சித்திரைப் புத்தாண்டினை சிறப்பிக்கும் வண்ணம் விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வருடம் கழகத்தின் 29ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நடத்தப்பட்ட சித்திரைப் புத்தாண்டு கொண்டாட்ட சிறப்பு விளையாட்டு நிகழ்வில் பங்குபற்றிய 33 வயதான இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை, பேத்தாழை கருங்காலிச்சோலை விளையாட்டு மைதானத்தில் கயிறு இழுத்தல், வழுக்குமரம் ஏறுதல் போன்ற விளையாட்டுகளில் உற்சாகத்துடன் பங்குபற்றிய குறித்த இளைஞர் வழுக்குமரம் ஏறும் விளையாட்டில் ஈடுபட்ட போது வழுக்கி விழுந்தார்.

பலமாக அடிபட்டதனால் குறித்த இளைஞரை வாழைச்சேனை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். பின்னர் அங்கிருந்து மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பொலனறுவை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்றுவந்த அவர் சிகிச்சை பலனின்றி நேற்று திங்கட்கிழமை அதிகாலை உயிரிழந்துள்ளார்.சந்திவெளியினை பிறப்பிடமாக கொண்ட சசிகரன் எனும் இளைஞரே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார். பேத்தாழை கருங்காலிச்சோலையில் திருமணம் செய்துள்ள இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். இவர் கடல்தொழிலில் ஈடுபட்டு வந்தார்.

## கதிர்காமம் வருடாந்த திருவிழா ஜூலை 6 ஆம் திகதி ஆரம்பம்



### பஸ்நாயக்க நிலமே திஷான் அறிவிப்பு



வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் ஆடிவேல் விழா எதிர்வரும் ஜூலை 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது என்று ருஹுனு மகாகதிர்காமம் ஆலய பஸ்நாயக்க நிலமே திஷான் குணசேகர உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

16 நாட்கள் திருவிழா பெரஹரா ஊர்வலம் இடம்பெற்று ஜூலை 21ஆம் திகதி இரவு பெரும் பெரஹரா இடம்பெறும்.

ஜூலை 22ஆம் திகதி மாணிக்ககங்கையில் நீர் வெட்டு திருவிழாவுடன் அதாவது தீர்த்தோற்சவத்துடன் உற்சவம் நிறைவுபெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

கன்னிக்கால் அல்லது பந்தல் கால் நடும் நிகழ்வு கடந்த 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் சுபமுகூர்த்த வேளையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**(காரைதீவு குறூப் நிருபர்)**

## புணானை பகுதியில் விபத்து; குடும்பத்தினர் படுகாயம்!

**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

ஓட்டமாவடியைச் சேர்ந்த குடும்பமொன்று காரில் கொழும்பு சென்று திரும்பி வரும் வழியில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை (27)புணானை தொழில்நுட்ப பல்கலைக்கழக பகுதியில் வைத்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் காயமடைந்தவர்கள் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்கள்.



கார் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகியதாலேயே கார் குடைசாய்ந்து விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## அறிவு ஒளி மையத்தின் முத்தமிழ் மாணவர் மன்ற நிர்வாகக் கூட்டம்

**(தம்பலகாமம் குறூப் நிருபர்)**



திருகோணமலையில் உள்ள பத்தாம் குறிச்சி அறிவு ஒளி மையத்தின் முத்தமிழ் மாணவர் மன்ற நிர்வாகக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதில் தலைவர், துணைத்தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட்ட 15 நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் 15 செயற்குழு உறுப்பினர்கள் பங்குபற்றினர்.

இக்கூட்டத்தில் முதன்மையாகக் கலந்து கொண்ட மன்றத்தின் ஆலோசகர் மற்றும் அறிவு ஒளி மைய நிறுவனர் அஜித்குமார் உதயகுமார் பேசுகையில் எதிர்கால திட்டம் மற்றும் மாணவர்களின் அபிவிருத்திக்கான சில திட்டங்களை எடுத்துரைத்தார்.



முத்தமிழ் மாணவர் மன்றத் தலைவர் மாதவராசா டிலக்ஷிகா, துணைத்தலைவர்கள் செந்தூரன் வர்ஷன், சாந்திஸ்வரன் டிலுசியா மற்றும் ச. லுகேஷ் ஆகியோர் மாணவர் மன்றம் செயற்படும் விதம் மற்றும் அதில் உள்ள நிறைகுறைகளை நிவர்த்தி செய்ய தேவையான வழிமுறைகளைப் பற்றி கலந்துரையாடினர்.

பொருளாளர் தினேஷ்குமார் சாத்விகா மற்றும் பொதுச்செயலாளர் இளங்கோவன் ரிஷிகவி ஆகியோர் மாணவர் மன்றத்தின் சந்தாப் பணம் மற்றும் அதனை கையாளும் போது செய்யப்பட வேண்டிய விதம் ஆகியவற்றை தெளிவாக எடுத்துரைத்தனர்.

## கிண்ணியா சிறுகைத்தொழில் ஊக்குவிப்பு சந்தை

**(கிண்ணியா தினகரன் நிருபர்)**



சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவினால் மாதாமாதம் நடத்தப்பட்டு வருகின்ற சிறுகைத்தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் சந்தையானது கிண்ணியா பிரதேச செயலக வளாகத்தில் நேற்று திங்கட்கிழமை பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனியின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது .

இச்சந்தை நிகழ்வில் விசேடமாக மருதாணி, இனிப்புப் பலகாரம், சத்துமா, மிளகாய்த் தூள் வகை, நஞ்சற்ற மரக்கறி, இயற்கையான அழகுபடுத்தும் உற்பத்திப் பொருட்கள் விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஐ . முஜீப், சமுர்த்தி முகாமையாளர் முஸம்மிலா ராபி ஆகியோருடன் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## நற்பிட்டிமுனையில் கல்வி சாதனையாளர்கள் கௌரவிப்பு

**(காரைதீவு குறூப் நிருபர்)**



நற்பிட்டிமுனை ஸ்ரீ கணேசராலயம் சேனைக் குடியிருப்பு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய நிர்வாக சபை இணைந்து நடாத்தும் மாணவர்களுக்கான கௌரவிப்பு மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான சீருடை வழங்கும் நிகழ்வு ஆலய தலைவர் த.ரவிராஜ் தலைமையில் நேற்றுமுன்தினம் நற்பிட்டிமுனை சுமங்கலி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளாக கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரம்கின் பக்கீர், பெரியநீலாவணை விசேட அதிரடிப் படை தலைமை அதிகாரி சி.எஸ். ரத்நாயக்க, மற்றும் அம்பாறை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி, நற்பிட்டிமுனை ஆலயங்களின் தலைவர்கள்,செயலாளர்கள்,பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள்,அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள்,பொது அமைப்புக்கள் விளையாட்டு கழகங்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

மேலும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, க. பொ. த. சாதாரண தரப்பரீட்சை, உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான நினைவுச் சின்னம், பணப்பரிசில் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு சீருடை நிதிப்பங்களிப்பினை ஏ. யோகராஜ், கே.தேவகுமார் ஆகியோர் வழங்கியிருந்தனர்.

கல்முனையில்

## மாதாந்த மின்கட்டண பட்டியலை குறுஞ்செய்தி, மின்னஞ்சல் மூலம் வழங்க நடவடிக்கை

**(ஒலுவில் விசேட நிருபர்)**

இலங்கை மின்சார சபையின் கல்முனைப் பிராந்திய மின் பொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் மாதாந்த மின் கட்டண பட்டியல்களை குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்முனைப் பிராந்திய பிரதான மின் பொறியியலாளர் தெரிவித்தார்.

வாடிக்கையாளர்கள் தங்களது கையடக்கத்தொலைபேசி இலக்கத்தை அல்லது மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்வதன் ஊடாக உங்கள் மாதாந்த மின் பட்டியல் மற்றும் மின்சார சபையின் ஏனைய தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உங்கள் வீடுகளுக்கு வரும் மின் வாசிப்பாளரிடமும் நேரடியாக பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான விபரங்கள் மின் வாசிப்பாளர்கள் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு துண்டுப்பிரசுரம் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை,மாதாந்த மின்சாரப் பட்டியலில் காணப்படும் நிலுவையை உடனடியாக செலுத்தி மின் துண்டிப்பை தவிர்த்துக் கொள்ளுமாறும் மின் பாவனையாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

ஒரு மாதத்திற்கும் மேலான கட்டணத்தை கொண்டிருப்பவர்களின் மின் துண்டிப்பு செய்யப்படவுள்ளதோடு, அவ்வாறு இணைப்பு துண்டிக்கப்படுமிடத்தில் மீள் இணைப்பை ஏற்படுத்துவதற்காக முற்று முழுதான மின் நிலுவைக் கட்டணம், தண்டப்பணம் மற்றும் மீள் இணைப்புக் கட்டணம் என்பன செலுத்த வேண்டுமெனவும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.



## மோட்டார் சைக்கிள் திருட்டுகள் அதிகரிப்பு

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் மோட்டார் சைக்கிள் திருட்டுகள் அதிகரித்து உள்ளதாகவும் , திருடப்படும் மோட்டார் சைக்கிள்கள் உடனேயே உதிரிபாகங்களாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண நகர் பகுதிகளை அண்மித்த பகுதிகளில் சில மாதங்களில் 32 மோட்டார் சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளன. அவை தொடர்பிலான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. விசாரணைகளின் போது, திருடப்படும் மோட்டார் சைக்கிள்களை உடனேயே உதிரிபாகங்களாக பிரித்து விற்பனையில் ஈடுபடுகின்றனர். அதனால் மோட்டார் சைக்கிள்களை மீட்பதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம்.

மோட்டார் சைக்கிள்களை பாதுகாப்பாக நிறுத்தி விட்டு, அவற்றுக்கு "ஹாண்டில் லொக்" போட்டு செல்லுமாறும், மோட்டார் சைக்கிள்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

வங்கிகளில் அடமானத்திலுள்ள காணிப்பத்திரங்களையும்

## உரித்து வேலைத்திட்டத்தில் உள்வாங்க நடவடிக்கை!



வங்கிகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள காணிப்பத்திரங்களின் உரிமையாளர்களையும் உரித்து வேலைத் திட்டத்தில் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

நாடளாவியரீதியில் 20 இலட்சம் காணி உறுதிகளை வழங்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட மக்களுக்கான 5400 காணி உறுதிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

காணிப்பத்திரங்களை மீண்டும் பிரதேச செயலாளர்களிடம் வழங்கி தங்களுக்கான உறுதிகளை பெற்றுக் கொள்வதில் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளமை தொடர்பில் அறியக்கிடைத்துள்ளதாக தெரிவித்தார்.

காணிப் பத்திரம் கைமாற்றப்பட்டுள்ளமை, சீதனமாக வழங்கியுள்ளமை, வங்கிகளில் அடகு வைக்கப்பட்டுள்ளமை போன்ற காரணங்களால், பலருக்கு உரித்து திட்டத்தின் கீழ் காணி உறுதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியாது உள்ளதாக ஆளுநர் தெரிவித்தார்.

எனினும் வங்கிகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள காணிப் பத்திரங்கள் தொடர்பில் கலந்துரையாடி ஜனாதிபதி தீர்வை பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பார் எனவும் ஆளுநர் குறிப்பிட்டார். எனவே ஜனாதிபதியின் கனவு திட்டமான உரித்து வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என ஆளுநர் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளார்.

# வடக்கின் உதயம்

சந்நிதியான் ஆச்சிரமத்தால்

## வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலைக்கு குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம்

(கரவெட்டி தினகரன் நிருபர்)

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் ரூ.750000 பெறுமதியில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்திக் கொடுக்கப்பட்டு நேற்று சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டு வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வு வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது விருந்தினர்கள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து குடிநீர் சுத்திகரிப்பு இயந்திர தொகுதியை நிகழ்வில் பிரதம விருந்தினரும், சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் நாடாவை வெட்டி திறந்து வைத்ததுடன் பெயர்பலகையையும் திரை நீக்கம் செய்துவைத்தார்.

தொடர்ந்து மங்கள சுடர் ஏற்றலுடன் மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், அதன் தொண்டர்களான ஓய்வு பெற்ற அதிபர் ஆ.சிவநாதன், கரவெட்டி வைத்தியசாலை வைத்திய அதிகாரி வே.கமலநாதன், வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள், தாதியர்கள், மற்றும் ஊழியர்கள், வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை அபிவிருத்தி சங்க நிர்வாகிகள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

பேசாலை

## முருகன் கோயில் பகுதியில் புதையல் தோண்டிய சம்பவம்

(மன்னார் குறூப் நிருபர்)



மன்னார் பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முருகன் கோவில் பகுதியிலுள்ள காட்டுப்பகுதியில் நேற்றையதினம் (27) காலை அடையாளம் காணப்பட்ட இடத்தில் மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய அகழ்வு நடவடிக்கை இடம்பெற்றது.

எனினும் குறித்த அகழ்வு நடவடிக்கைகளின் போது எவ்வித பொருட்களும் மீட்கப்படவில்லை.

முருகன் கோவில் பகுதியிலுள்ள காட்டுப்பகுதியில் புதையல் தோண்டியதாக கூறப்படும் நிலையில் கடற்படை அதிகாரி உள்ளடங்களாக 8 பேர் கடந்த சனிக்கிழமை (18) மாலை கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்காக பேசாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து ஸ்கேனர் இயந்திரம் உள்ளடங்கலாக புதையல் தோண்ட பயன்படுத்திய பொருட்களும் மீட்கப்பட்டிருந்தது.

பேசாலை பொலிஸார் குறித்த 8 பேரையும் விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

## வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் விபத்து

(சாவகச்சேரி விசேட நிருபர்)



சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனகம் புளியடிச் சந்திப்பகுதியை அண்மித்த புத்தூர் வீதியில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரம் காணப்பட்ட கம்பத்துடன் மோதியதில் மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் சரசாலை தெற்கைச் சேர்ந்த 23 வயதான ஆருஜன் என்ற இளைஞன் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

உயிரிழந்த இளைஞன் கட்டார் நாட்டில் பணிபுரிந்து அண்மையில் நாடு திரும்பிய போதே விபத்துக்கு முகம்கொடுத்துள்ளார்.

## ஆலய உண்டியல் உடைத்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது

(கரவெட்டி தினகரன் நிருபர்)



யாழ்ப்பாணம் ஆவரங்கால் சிவன் கோவிலில் உண்டியல் உடைத்து திருட்டில் ஈடுபட்டவர் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டார்.

குறித்த ஆலயத்தில் திருடிவிட்டு மற்றொரு ஆலயத்தில் திருட முற்பட்ட போதே அச்சுவேலி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து திருடப்பட்ட பணமும், குறடு, கம்பி, போலி திறப்புக்கள் உள்ளிட்ட சில பொருட்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பாடசாலை மாணவி துஷ்பிரயோகம்; சந்தேகத்தில் ஆசிரியர் கைது

(யாழ். விசேட நிருபர்)

யாழில். பாடசாலை மாணவியை துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஆசிரியர், நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் புறநகர் பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் கற்பிக்கும் ஆசிரியரொருவர் 10 வயதான பாடசாலை மாணவியொருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவி தனது பெற்றோருக்கு தெரியப்படுத்தியுள்ளார். இதனையடுத்து பெற்றோர் ஆசிரியருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், ஆசிரியரை கைது செய்து மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதுடன் ஆசிரியரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை ஆசிரியரினால் மேலும் சில மாணவிகளும் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## யாழ். மாவட்டப் பண்பாட்டுப் பேரவையின் வருடாந்த நூல் வெளியீடு

(கோப்பாய் குறூப் நிருபர்)

யாழ். மாவட்டப் பண்பாட்டுப் பேரவையால் வருடந்தோறும் வெளியிடப்படவுள்ள யாழ்ப்பாணம் பற்றிய நூலுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

'ஈழத்தின் வடபுலம் வரலாற்றின் முன்னும் பின்னும்' என்ற தொனிப்பொருளில் (மொழி, பண்பாடு, கலைகள் முதலான பல்வேறு பரிணாமங்களை உள்ளடக்கியதான ஆக்கங்கள்) அமைந்த ஆக்கங்களை, 8 பக்கங்களுக்கு மேற்படாமல் A4 தாளில் கணணித் தட்டச்சுசெய்து (Font: Baamini, Font size:12) பிரதிகளாக எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக. foolintha gmail எனும் மின்னஞ்சல் முகவரிக்கு, அல்லது மாவட்ட செயலகத்திற்கு நேரடியாகவோ, தபால் மூலமாகவோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களை யாழ்ப்பாண மாவட்ட @ http://jaffna.dist.gov.lk இணையத்தளத்திலும், யாழ்ப்பாண மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.



பண்டாரவளை ஸ்ரீ சிவசுப்பிரமணியம் கோவில் வருடாந்த தீர்த்தோற்சவ நிகழ்வுகளில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் வடிவேல் சுரேஷ், பக்த அடியார்களையும் படத்தில் காணலாம்.




## கடும் மழை காரணமாக மரக்கறி செய்கையாளர்கள் பாதிப்பு

(ஊவா சுழற்சி நிருபர்)

மலையகத்தில் பெய்து வரும் கடும் மழை மற்றும் பலத்த காற்று காரணமாக மரக்கறி செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இங்குள்ள மரக்கறி மற்றும் விவசாய நிலம் மற்றும் உற்பத்திப் பொருட்கள் கடும் மழையினால் பெரும் சேதமடைந்துள்ளதாக மலையக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். சீரற்ற காலநிலை மலையகத்தில் தொடர்வதால் நுவரெலியா, கந்தபொல, ஹற்றன், நானுஓயா, மஸ்கெலியா மாத்திரமன்றி வெலிமடை பொரகஸ் சில் மியாபுர, ஹப்புத்தளை, எல்ல, பண்டாரவளை, கொஸ்லந்தை போன்ற பகுதிகளில் நட்டப்பட்ட உருளைக்கிழங்கு, கோவா, போஞ்சி, லீக்ஸ் போன்ற மரக்கறி மற்றும் இதர விவசாய விளைபொருட்களும் வெள்ளத்தினால் அள்ளுண்டு போயுள்ளது. விவசாய காணிகளில் வெள்ள நீர் புகுந்து வயல்களும் வரம்புகளும் மண் மேட்டினால் நிரப்பியுள்ளன.

## ஈஸி கேஸ் முறையில் ஹெரோயின் விற்பனை

சந்தேகநபர் தப்பியோட்டம்

ஈஸி கேஸ் முறையில் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வரும் ஹந்தயா என அழைக்கப்படும் சந்தேகநபர், அவரை சோதனையிட சென்ற பொலிஸ் பரிசோதகரின் விரலை கடித்து அருகிலுள்ள கால்வாயில் குதித்து தப்பிச்சென்றதாக ருவன்வெல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய ருவன்வெல்ல அட்டுலுகம பிரதேசத்திலுள்ள விடுதியொன்றின் அருகில் வைத்து சந்தேகநபரை பிடித்து சோதனை செய்ய முற்பட்ட போதே, இவ்வாறு பொலிஸ் பிடியிலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

சந்தேகநபர், பதிவுசெய்யப்பட்ட குற்றவாளிகள் பட்டியலிலுள்ள ஒருவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் காயமடைந்த பொலிஸ் பரிசோதகர் கரவனெல்ல ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளதாகவும் சந்தேகநபரை கைது செய்வதற்கான நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் ருவன்வெல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரியின் விஞ்ஞான பிரிவின் வெளியீடான 'பெரகன்' சஞ்சிகையின் இரண்டாவது பதிப்பின் வெளியீடு நேற்று அதிபர் ஏ. எல்.ஏ. ரஹ்மானின் தலைமையில் நாகூர்கம நியூமினி வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக பிரபல குழந்தை நல மருத்துவரும்,எழுத்தாளரும், பேச்சாளருமான எம்.எல்.ரைஸ் முஸ்தபா கலந்துகொண்டதுடன் விசேட அதிதியாக சப்ரகமுவ பல்கலைக்கழக பேராசிரியர் எம்.எஸ்.எம்.அஸ்லம் கலந்து சிறப்பித்தனர்.

## மாத்தளையில் இரத்ததான நிகழ்வு

(மாத்தளை சுழற்சி நிருபர்)



வெசாக் தினத்தை முன்னிட்டு முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டு அலுவலக திணைக்களத்தின் அனுசரணையுடன் மாத்தளை கொங்காவல மற்றும் டவுன் ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகசபையின் ஏற்பாட்டில் இரத்ததான முகாமொன்று அண்மையில் கொங்காவல மஸ்ஜித் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

சகல இன மக்களும் இதில் கலந்து கொண்டு இரத்தம் வழங்கினர். மாத்தளை மாவட்ட வைத்தியசாலையின் இரத்த வங்கியின் பொறுப்பாளர் வீர கம தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வைத்திய குழுவினர் மற்றும் மேற்படி திணைக்களத்தின் அதிகாரிகள், பள்ளிவாசல் நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# நகர்வலம்



### புத்தளம் மாவட்டத்தில் பெய்த கடும் மழையால்

# 2429 குடும்பங்களைச் சேர்ந்த எண்ணாயிரம் பேர் பாதிப்பு

### பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக 15 பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட 146 கிராம சேவகர் பிரிவில் 2429 குடும்பங்களை சேர்ந்த 8006 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் புத்தளம் மாவட்ட அலுவலகத்தின் கடமைநேர அதிகாரியொருவர் தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்தின் மஹாகும்புக்கடவல, கருவலகஸ்வெவ, மாதம்பை, முந்தல், புத்தளம், சிலாபம், ஆராச்சிக்கட்டுவ, கற்பிட்டி , நவகத்தேகம, பல்லம, நாத்தாண்டிய, தங்கொட்டுவ, வென்னப்பு, மஹாவெவ மற்றும் வன்னாத்தவில்லு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள கிராமங்களில் வாழும் மக்கள் இந்த வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலகப் பிரிவில் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அங்கு 22 கிராம சேவகர் பிரிவில் 750 குடும்பங்களைச் சேர்ந்த 2676 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட செயலாளர் கூறினார்.

அத்துடன், வன்னாத்தவில்லு பிரதேச செயலகத்திற்குட்பட்ட 2 கிராம சேவகர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 7 பேரும், முந்தல் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 6 கிராம சேவகர் பிரிவில் 27 குடும்பங்களை சேர்ந்த 90 பேரும், மஹாகும்புக்கடவல பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 2 கிராம சேவகர் பிரிவில் 2 குடும்பங்களை சேர்ந்த 7 பேரும், கற்பிட்டி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 1 கிராம சேவகர் பிரிவில் 1 குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், கருவலகஸ்வெவ பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 4 கிராம சேவகர் பிரிவில் 6 குடும்பங்களை சேர்ந்த 24 பேரும், சிலாபம் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 22 கிராம சேவகர் பிரிவில் 149 குடும்பங்களை சேர்ந்த 585 பேரும், புத்தளம் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 5 கிராம சேவகர் பிரிவில் 557 குடும்பங்களை சேர்ந்த 1687 பேரும், மாதம்பை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 22 கிராம சேவகர் பிரிவில் 315 குடும்பங்களை சேர்ந்த 1001 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், நவகத்தேகம பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 4 கிராம சேவகர் பிரிவில் 15 குடும்பங்களை சேர்ந்த 45 பேரும், மஹாவெவ பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 19 கிராம சேவகர் பிரிவில் 520 குடும்பங்களை சேர்ந்த 1573 பேரும், தங்கொட்டுவ பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 13 கிராம சேவகர் பிரிவில் 15 குடும்பங்களை சேர்ந்த 70 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.




மேலும், அசாதாரண நிலை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளதுடன், 5 பேர் காயமடைந்துள்ளனர். இதில் மாதம்பை, முந்தல், ஆராச்சிக்கட்டுவ மற்றும் நாத்தாண்டிய பிரதேசத்தில் தலா ஒவ்வொரு மரணம் பதிவாகியுள்ளது. மேலும், 95 வீடுகளும், 17 வர்த்தக நிலையங்களும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

## ஹம்பாந்தோட்டையில் உஷ்ணமான காலநிலை

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டை எங்கும் கடந்த சில மாதங்களாக நிலவி வந்த உஷ்ணமான காலநிலை முற்றாக மாற்றமடைந்து தற்பொழுது மழைபெய்ய ஆரம்பித்துள்ளதனால் மக்களது அன்றாட செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

தொடர்ந்தும் மழைபெய்து வருவதனால் பாடசாலைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டாலும் மாணவர்களின் வருகை குறைவாகவே உள்ளது.

விவசாயிகள் வரட்சியின் பின்பு விவசாய செயற்பாடுகளில் ஈடுபட ஆரம்பித்தள்ளனர். மிருகங்கள் மற்றும் கால் நடைகளுக்கும் போதியளவு நீர் கிடைத்து வருகிறது. இலங்கை கடற் படையினரால் கரையோர பிரதேசங்களில் காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதைத் தவிர்த்து வருகின்றனர். மீனிற்கு தட்டுப்பாடு நிலவி காணப்படுகிறது. அத்தோடு மீனவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நிலவிவந்த உஷ்ணமான காலநிலையின் காரணமாக ஹம்பாந்தோட்டை உப்பளத்தில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட உப்பு அறுவடை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. பலத்த காற்றின் காரணமாக சில பகுதிகளில் வீடுகள் சேதமடைந்தள்ளது.

## தென் மாகாண பொலிஸ் நிலைய குறைபாடுகளை கேட்டறிந்த ஆளுநர்





**(வெலிகம தினகரன் நிருபர்)**

தென் மாகாண காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களிலுமுள்ள பொலிஸ் நிலையங்களின் குறைபாடுகளை கேட்டறிந்து அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தலைமையில் கலந்துரையாடலொன்று தென் மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் ஆளுநர் அலுவலக செயலாளர் கே.யூ. ஷந்திரலால், முதலமைச்சின் செயலாளர் கிரஷாந் டப்லியூ.மஹேந்திர, தென்மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மஹேஷ் சேனரத்ன மற்றும் காலி, மாத்தறை, ஹம்பந்தோட்டை மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## ஆண்டிமுனை கிராமத்திற்கான நீர் வழங்கல் திட்டம் ஆரம்பம்

**உடப்பு குறூப், புத்தளம் தினகரன் நிருபர்கள்**

உடப்பு ஆண்டிமுனை கிராமத்திற்கான நீர் வழங்கல் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வுகள் அண்மையில் வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஏ.எச்.எம் றியாஸ் தலைமையில் நடைபெற்றது.

ஆண்டிமுனை சனத் நிசாந்த பவுண்டேஷன் அமைப்பின் தலைவர் எம். சஹாதேவனின் வேண்டுகோளின் பேரில் வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் அல்ஹாஜ் ஏ.எச்.எம் றியாஸின் மேற்பார்வையின் கீழ் காலஞ்சென்ற முன்னாள் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த பெரேராவின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் உடப்பு ஆண்டிமுனை கிராமத்திற்கான நீர் வழங்கல் திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், புத்தளம் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான சிந்தக அமல் மாயாதுன்னவின் பங்குபற்றுதலுடன் சனத் நிசாந்த பெரேராவின் பாரியாரும் சட்டத்தரணியுமான சாமரி பிரியங்காவின் கரங்களால் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## அஸ்ஸஜி தேரருக்கு நினைவு சின்னம் வழங்கி கௌரவிப்பு

**ருஸைக் பாரூக்**



"புத்த ரஷ்மி" தேசிய வெசாக் வைபவம் கங்காராமய ஆலய வளாகத்தில் நடைபெற்றது. இந்த வெசாக் விழாவில் பாகிஸ்தான், இந்தோனேசியா, பங்களாதேஷ் , தாய்லாந்து ஆகிய நாடுகளின் தூதரகங்கள் பௌத்த பாரம்பரியத்தை அந்தந்த நாடுகளில் காட்சிப்படுத்தினர்.

பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் பாஹீம் உல் அசிஸ் ஹுனுப்பிட்டிய கங்காராமயவின் வணக்கத்துக்குரிய கலாநிதி கிரிந்தே அஸ்ஸஜி தேரருக்கு நினைவு சின்னம் ஒன்றை வழங்குவதையும் புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

## மரம் உடைந்து விழுந்து பொலிஸ் ஜீப் சேதம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**



கடமை நிமித்தம் அநுராதபுரம் சுகாதார சேவை அதிகாரி அலுவலகத்திற்கு அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலைய குற்றவியல் விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் சென்றிருந்த ஜீப்பில் சிதைந்த சீமை மரம் உடைந்து விழுந்ததில் ஜீப் வண்டிக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் மேற்படி சுகாதார சேவை அதிகாரி அலுவலகத்துக்கு முன்னால் நிறுத்திவிட்டு அந்த அலுவலகத்துக்கு சென்றிருந்த போது மழையுடனான காற்று வீசியதனால் ஜீப் மீது மரம் விழுந்துள்ளது. இதனால் ஜீப்பின் முன்பகுதிக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

மரம் விழுந்த போது ஜீப்பில் எவரும் இருக்காததால் எவருக்கும் எந்த ஆபத்தும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.



பாணந்துறை எலுவில அலவியா மகா வித்தியாலயத்தில் ஸ்மார்ட் வகுப்பறையை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆரம்பித்து வைத்தார். இதன்போது அவர், ஒரு தொகுதி ஆங்கிலதமிழ் அகராதிகளை ஆசிரியர்களிடம் கையளித்தார். இந்நிகழ்வில் பாணந்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் தாஹிர்பாஸி, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் நந்தன சொய்சா உள்ளிட்ட பிரமுகர்களும் படத்தில் காணப்படுகின்றனர். (படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

## மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கெப்பித்திகொல்லாவ பொலிஸ் பகுதியில் யக்காவெவ வனப்பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டு மிருகங்களை வேட்டையாடுவதற்காகச் சட்டவிரோதமான முறையில் பொருத்தப்பட்டிருந்த மின்கம்பியில் சிக்கி இவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கொப்பித்திகொல்லாவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## திருமண பந்த இணைவு தொடர்பான இலவச கற்கை நெறி நிறைவு

**அஷ்ரப் ஏ சமட்**





'லைப்பொண்ட்' சமூக சேவை நிறுவனம் நடாத்திய திருமண வாழ்வை எதிர்நோக்கி இருப்பவர்களுக்கான இலவச கற்கை நெறியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்கல் வழங்கும் வைபவம் சனிக்கிழமை (25) வட்டதெனியவில் அமைந்துள்ள கதீஜதுல் குப்ரா மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

கதீஜதுல் குப்ரா மகளிர் அரபுக் கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் ஏ.எஸ்.எம். பாரூக் (அல் அஸ்ஹரி) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 'லைப்பொண்ட்' நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எம். ஆர்.எம். ஸரூக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

லைப்பொண்ட் நிறுவனத்தின் வளவாளர் அஷ்ஷெய்க் அக்ரம் அப்துஸ் ஸமத் இந்நிகழ்வில் விசேட உரை நிகழ்த்திய அதேவேளை, லைப்பொண்ட் நிறுவனத்தின் இயக்குநர் அஷ்ஷெய்க் முஹம்மத் பகீஹுத்தீன், கதீஜதுல் குப்ரா மகளிர் கல்லூரியின் செயலாளர் சாஜஹான் உடையார் ஆகியோரும் சிறப்புரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் கல்லூரியின் மாணவிகள், பெற்றோர்கள், கல்லூரியின் விரிவுரையாளர்கள், பிரமுகர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## ஹல்மில்ல குளம் பகுதியில் யானைகளின் தொல்லை அதிகரிப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**

அ / ஹிதோகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹல்மில்ல குளம் விவசாயப் பகுதியில் காட்டு யானைகளின் தொல்லை மீண்டும் தலைதூக்கியுள்ளதாக இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். கூட்டம் கூட்டமாக தமது விவசாய நிலங்களுக்குள் நுழையும் இவ் யானைக் கூட்டங்களால் தமது விவசாய நிலங்களை பாதுகாக்க முடியாத நிலை காணப்படுவதாக இவர்கள் தெரிவிக்கின்றனர். நீண்ட காலமாக நிலவும் இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு அவசியம் என இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கடந்த 23ஆம் திகதி ஹல்மில்ல குளம் பகுதியில் சுமார் 20 வயது மதிக்கத்தக்க ஏழு அடி உயரம் கொண்ட காட்டு யானை ஒன்று துப்பாக்கிச் சூட்டினால் உயிரிழந்து காணப்பட்டதாக கருதப்படும் (ஆண்) யானை ஒன்றின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டு சந்தேகத்தின் பேரில் விவசாயி ஒருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

# கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் பாகிஸ்தான் பௌத்த அருங்காட்சியகம் திறந்துவைப்பு







**(இக்பால் அலி)**

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் பௌத்த நூதனசாலையிலுள்ள பாகிஸ்தான் நாட்டினது பௌத்த அருங்காட்சியகம் முழுமையாக புனர் நிர்மாணம் செய்யப்பட்டு மக்கள் பார்வைக்காக திறந்து வைக்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பாகிஸ்தான் நாட்டு உயர்ஸ்தானிகர் பாஹிம் உல் அஸீஸ் உத்தியோகபூர்வமாக இதனை திறந்து வைத்தார்.

இதன்போது கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் தியவதன நிலமே பிரதீப் நிலங்க மற்றும் இலங்கைக்கான பாகிஸ்தான் நாட்டின் கவுன்சிலர் அப்சல் மரைக்கார் உள்ளிட்ட பலர் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். பௌத்தம் பாகிஸ்தானுக்கு ஒரு வளமான வரலாற்றையும் கலை மற்றும் கட்டடக்கலையையும் அளித்துள்ளது. அதன் பல இடிபாடுகள் இன்றும் காந்தாரப் பகுதியில் காணப்படுகின்றன. 2300 ஆண்டுகளுக்கு முன்னர், முதல் மௌரிய மன்னரான அசோகனின் கீழ் பௌத்தம் பாகிஸ்தானில் பரவியதாகவும், அது அரசால் ஆதரிக்கப்பட்டதாகவும் பாகிஸ்தானின் வரலாறு சாட்சியமளிக்கிறது.

இதனடிப்படையில் பாகிஸ்தானிய பௌத்தத்தை சித்தரிக்கும் கண்காட்சி அரங்கம் அமைந்துள்ளது.

## மரபை பேணுதலும் அதை கையளித்தலும் அனைத்து உயிர்களுக்குமானது

# "யாழ் பெட்டகம் – நிழலுருக்கலைக் கூடம்" நிறுவனத்தின் பணிகள் குறித்த ஒரு கருத்துப் பகிர்வு




உலக பண்பாட்டுத் தினத்தை முன்னிட்டு யாழ். பெட்டகம் நிறுவனம் "யாழ் மண்ணே வணக்கம்" என்கின்ற நிகழ்வை சிறப்பாக நடத்தியது. அந்த நிகழ்வு குறித்து காவேரி கலாமன்றத்தின் இயக்குநர் வண. யோசுவா வழங்கிய கருத்துப்பகிர்வு.

யாழ்ப்பாண பெட்டகம் நிழலுருக்கலைக் கூடம் மரபார்ந்த வாழ்வு சார்ந்த மரபுரிமைகளை பாதுகாக்கும் பெட்டகமாக நமக்குள் தலைநிமிர்ந்து நிற்கிறது.

இந்தப் பணியை காத்திரமாக செய்து வருகின்ற பெட்டகத்தின் இயக்குநர் மா.அருள்சந்திரனை மனதார வாழ்த்துகின்றேன்.

மரபைப் பேணுதல் எதற்கு என்பது என்ற கேள்விக்கு நேரடியான பதில் வாழ்வை கையளித்தல் என்ற கருத்தே பலராலும் முன்வைக்கப்படுகிறது.

உலக வரலாறு எப்பொழுதும் வாழ்வை கையளித்தல் பற்றியே பேசுகிறது. இந்த மரபை பேணுவதற்கான ஒருவழி வாழ்தலில் அதை பிரயோகிப்பது என்பதாகும் என்று பலரும் இன்றுவரை நம்புகின்றனர். அந்த மரபுக்காகவும் வாழ்தலுக்காகவும் நிலமும் நிலம் சார்ந்த வளங்களும் தேவைப்படுகின்றன. அந்தநிலம், வளம் சார்ந்த இருப்புக்கும் பங்கீட்டுக்கும் இடையிலான



இடைவெளிகள் அதிகரிக்கின்றபோது போர்கள் நடைபெறுகின்றன.

பின்பு அந்தப்போரும் அந்தப்போர்சார்ந்த இழப்புகள், வெற்றிகள், தோல்விகள் யாவும் வரலாறாக கொண்டாடப்படுகின்றன. இதுதான் மனித வாழ்வின் வரலாறாக நாம் பதிவுசெய்து வருகின்றோம்.

தமிழர் மரபுரிமை சார்ந்த ஆவணப்படுத்தல்கள் தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் காலத்துக்குக்காலம் பல தமிழ் ஆர்வலர்களால் கவனமாக செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அவைகளின் ஊடாக மரபை நகர்த்துதல், பண்பாட்டை கையளித்தல் என்ற உயரிய விழுமியத்தை வாழ்தலுக்கான பணியாக பலரும் தமது வாழ்வை அர்ப்பணித்து செய்திருக்கின்றார்கள். அந்தத்தொடர்ச்சியின்ந நீட்சியாக யாழ்ப்பாணத்தில் திருவாளர்அருள்சந்திரன் அவர்கள் நம்மத்தியில் ஒரு நட்சத்திரமாகமின்னுகின்றார்.

கடந்த இரண்டு சகாப்தங்களாக மரபுரிமை சார்ந்த ஆளுமைகள், வரலாறுகள் பண்பாடு, தொன்மம் சார்ந்த உபகரணங்கள், நிழற்படங்கள், சமய நம்பிக்கைகள் சார்ந்த வரலாறுகள் போன்ற பல்வேறு விடயங்களை பாதுகாப்பதற்காக யாழ்ப்பாணப் பெட்டகம் நிழலுருக்கலைக்கூடம் என்கின்ற ஓர் அமைப்பை நிறுவி அதனூடாக மேற்குறிப்பிட்ட பல விடயங்களை ஆவணப்படுத்தி நூலாக வெளியிட்டது மாத்திரமல்லtreasurehouseofjaffna.com என்ற ஓர் இணைய வழி அருங்காட்சியகத்தையும் மிகச் சிறப்பாக நடத்தி வருகின்றார்.

இந்த வரலாறு சார்ந்த ஆவணப்படுத்தலில் அருள்சந்திரன் முயற்சிகளை மேற்கொள்ளும்போது பல்வேறு நெருக்கடிகளும் சவால்களும் அவரை சூழ்ந்து இருந்ததை நான் நன்றாக அறிவேன்.

குறிப்பாக இவ்விதமான ஆவணப்படுத்தல்களால் சமகால சமூகத்திற்கு எவ்விதமான நேரடியான பலன்கள் கிடைக்கப் போகிறது? குறிப்பாக மக்களுக்கு பல்வேறு வேறுபல தேவைகள் இருக்கின்ற இந்தச் சூழலில், இவ்விதமான ஆவணப்படுத்தல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமா என்று பலரும் கேள்வி எழுப்பியது மட்டுமல்ல இந்தபயணத்தில் அருள்சந்திரனோடு பங்குகொள்வதற்கும் தயங்கினார்கள். ஆனால், அனைத்து உயிர்களும் வாழவில்லையானால் மானுடம் வாழ முடியாது. எனவே, வாழ்தல், கையளித்தல், என்பது அனைத்து உயிர்களுக்குமானது. எனவே, மரபை பேணுதல் மற்றும் கையளித்தல் வாழ்தலுக்கு இட்டுச்செல்கிறது என்றால் அது அனைத்து உயிர்களுக்கான வாழ்தலுக்கு இட்டுச்செல்கிறது என்பதை இங்கே அழுத்தமாக பதிவு செய்ய விரும்புகின்றேன்.

### யாழ்ப்பாணப் பெட்டகமும் "யாழ் மண்ணே வணக்கம்" செயற்திட்டமும்

காவேரிக் கலாமன்றத்தோடு இணைந்து யாழ்ப்பாணப் பெட்டகம் –நிழலுருக் கலைக்கூடம் செயற்படுத்திய "யாழ் மண்ணே வணக்கம்" என்பது வெறும் வார்த்தைகளல்ல. அது இந்த மண்ணிலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஒவ்வொருவரும் ஆத்மார்த்தமாக மண்ணை நேசிக்க வேண்டியவர்களாக இருக்கவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொள்வதற்கான வார்த்தை. யாழ்ப்பாணப் பண்பாட்டு மரபும் நேரத்திற்கு நேரம், நிமிடத்திற்கு நிமிடம் நாளொரு மேனியாகவும் பொழுதொரு வண்ணமாகவும் மாற்றமுற்று வருவதனை உய்த்துணர்ந்தவர்களாக இத்திட்டத்தை செயற்படுத்த முயன்றுள்ளோம்.




குறிப்பாக இன்றைய இளம் தலைமுறையினர் கால்போன போக்கிலும் மனம்போன போக்கிலும் பயணிக்கின்றனர். இப்பயணத்தின் ஆபத்தினை உணர முடியாமல் வாழ்கின்றனர். யாழ் மண் தனக்கென்றதான புனிதத்தை கொண்டிருக்கின்றது. இங்கே பல அறிஞர்களும் தத்துவஞானிகளும், யோகிகளும் ஆளுமையாளர்களும் தம்கால் பட நடந்து தமிழையும் மண்ணையும் மண்ணிற்கேயுரித்தான மரபையும் பண்பாட்டையும் கண்போலக்காத்தவர்கள். அவர்களது வழித்தோன்றல்களாகிய நாம் அப்புனிதத்தை இழந்துவிடாது அடுத்த தலைமுறையினரும் பின்பற்றி மண்போற்றும் மாந்தர்களாக வாழ வேண்டும் என்ற உயரிய நோக்கமே "யாழ் மண்ணே வணக்கம்" என்பதாகும்.

இத்திட்டத்தில் இயற்கையை நேசிக்கும் பண்பிலிருந்து நாம் நீண்ட தூரம் விலகிச்சென்றவர்களாக நாம் வாழ முடியாது என்ற எண்ணக்கருவை அனைவர் மத்தியிலும் விதைப்பதற்காக பிரபஞ்ச நேசம் என்கின்ற கருத்திட்டமும், யாழ்ப்பாண வரலாற்றினை முதற்கட்டமாக ஐரோப்பியர் காலத்தினை மையப்படுத்திய ஆய்வு முயற்சியினை மேற்கொண்டு நூற்தொகுப்பாக்கம் செய்தல், யாழ்ப்பாணத்தின் ஆளுமைகள், இளைய தலைமுறையினருக்கான எழுச்சியூட்டும் கருத்துக்களை முன்வைத்ததான பாடல்களை வெளியிடுதல் மற்றும் மண்ணின் மகிமை பேசும் பாடல்களை வெளியிடல், யாழ்ப்பாண ஆளுமைகளின் புகைப்படங்களடங்கிய ஆவணக்கண்காட்சி, இராவணன் விழா, இளையோருக்காக ஆக்க முயற்சிகளுக்கான பயிற்சிகள் என இன்னோரன்ன விடயங்களை உள்ளடக்கியதாக "யாழ் மண்ணே வணக்கம்" செயற்திட்டம் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.

இதனுடைய அறிமுக விழா உலகப்பண்பாட்டு தினமாகிய கடந்த 21ஆம் நாள் யாழ்ப்பாணம் சேர் பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள றாஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் வாழ்நாட் பேராசிரியரும் முன்னாள் துணைவேந்தரும் யாழ்ப்பாணப் பெட்டகத்தின் போஷகருமாகிய பொன். பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் ஊடக அனுசரணையை TUBE தமிழ் தமிழ்க்கொடி நிறுவனத்தினர் வழங்கியிருந்தார்கள்.

முன்னைநாள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராசா, வல்வை ந.அனந்தராஜ் ஆகியோர் வாழ்த்துரையினை வழங்கினர். இவ்விழாவில் மூன்று முக்கிய நிகழ்வுகள் நடைபெற்றன.

இங்கு யாழ் மண்ணின் தவப்புதல்வனான ஆறு திருமுருகன் ஆற்றிய, ஆற்றி வருகின்ற பணிகளுக்காக "சிவத்தமிழ் ஞாயிறு" என்னும் விருதினையும், தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் வாமதேவா தியாகேந்திரனது பணியினை விதந்து "பணி நேயப்பரிதி" என்னும் விருதினையும், யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவரும் தமிழ்ப்பேராசிரியருமான சி.சிவலிங்கராசா அவர்களது கல்விப்பணிகளுக்காக "பணித்திருந்தகை" என்னும் விருது வழங்கிவைக்கப்பட்டது.

காவேரிக் கலாமன்றத்தின் நிதிப்பங்களிப்போடு உருவாக்கப்பட்ட யாழ்ப்பாணப்பத்தாதி என்னும் நூல் வெளியீட்டின் அறிமுகத்தினை வாழ் நாள் பேராசிரியர் செ.கிருஸ்னராசா நிகழ்த்தினார்.

நூலிற்கான வெளியீட்டுரையை காவேரிக் கலாமன்ற இயக்குநர் வண ரீ.எஸ். ஜோசுவா நிகழ்த்தி நூலை வெளியிட்டு வைத்தார்.





SLS Bank
ශ්‍රී ලංකා ඉතිරිකිරීමේ බැංකුව
இலங்கை சேமிப்பு வங்கி
Sri Lanka Savings Bank

# வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி

A FULLY OWNED SUBSIDIARY OF NSB

## 2024 மார்ச் 31ஆம் திகதி முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுகள்

### 2024 மார்ச் 31ஆம் திகதியன்றுள்ளவாறான நிதி நிலைமைகள் கூற்று

| ஆயிரம் ரூபாய்களில் | நடைமுறை காலப்பகுதி 31/03/2024 இல் உள்ளவாறு | முன்னைய காலப்பகுதி 31/12/2023இல் உள்ளவாறு |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 83,344 | 31,894 |
| மத்திய வங்கியிலுள்ள மீதிகள் | - | - |
| வங்கியிலுள்ள இருப்பு | 671,442 | 1,042,216 |
| வழித்தோன்றல் நிதிக் கருவிகள் | - | - |
| கடன் தீர்ப்பனவில் உள்ள நிதிச் சொத்துக்கள் | | |
| - கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 600,616 | 630,953 |
| - கடன்கள் மற்றும் ஏனைய கருவிகள் | 6,283,054 | 6,075,046 |
| ஏனைய விரிவான வருமானம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் ஆதனங்கள் | - | - |
| இலாபம் மற்றும் நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் ஆதனங்கள் | 225,675 | 202,497 |
| துணைக் கம்பனிகளில் முதலீடுகள் | - | - |
| இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களில் முதலீடுகள் | - | - |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 1,132,418 | 1,134,148 |
| ஆதன பயன்பாட்டு உரிமைகள் | 35 | 104 |
| ஆதன முதலீடுகள் | 349,000 | 349,000 |
| நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள் | 0 | 0 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | - | - |
| ஏனைய சொத்துக்கள் | 51,576 | 45,480 |
**விலைமனு ஏற்றுக்கொள்ளும் இறுதி தினம் - 2024.06.19 ஆந் திகதி பி. ப. 2.00 மணி**

மேலதிக விபரங்களுக்கு கடமை நாட்களில் மு. ப. 8.30 மணி தொடக்கம் பி. ப. 4.15 மணி வரை 011-2694898 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது www.documents.gov.lk இணையதளத்தினூடாக தொடர்புகொள்ளலாம்.

**தலைவர்,**
**பொருட் கொள்வனவு குழு,**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு - 08.**
**2024.05.28**

**தொலைபேசி : 011 2694898**
**இணையதளம் : www.documents.gov.lk**

## சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சுத்திகரிப்புப் பிரிவு)

பகிரங்கக் கேள்வி **– 4503T**

**ROTATING EQUIPMENT ALIGNMENT KIT**

**வழங்குதல்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, இலங்கை, களனிய, சப்புகஸ்கந்த சுத்திகரிப்புப் பிரிவு, திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வெளிநாடுகளிலுள்ள அவர்களது அதிகாரம்பெற்ற ஏற்றுமதியாளர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து (உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதி முகவர்கள்) விலைக்கோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரக்குறிப்புகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முழுமையாக அமையும் வகையில் மேற்குறிப்பிட்ட பொருளை வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

எந்தவொரு கேள்விதாரரும் கேள்வியைச் சமர்ப்பிக்கும்போது வேண்டுகோள் கடிதத்துடன் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 3,500.00 ரூபாவை 2024 ஜூன் 24ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நாட்களில் கொழும்பு - 09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தின் 05ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் செலுத்துதல் வேண்டும் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பணியகத்தின் காசாளரிடம் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். மேலும் சகல கொடுப்பனவுகளையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்தின் ஊடாக கேள்வி இலக்கம் மற்றும் கேள்விதாரரின் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு பணத்தை செலுத்தலாம்.

கேள்வி நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகள் அடங்கிய கேள்வி ஆவணங்கள் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com எனும் இணையதளங்களில் கிடைக்கத்தக்கதாக உள்ளன.

மாற்று வழியாக கேள்வி ஆவணங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட விலாசத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனு ஆவணங்கள் 2024 ஜூன் 26ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு, அன்றைய தினமே உடனடியாக அவைகள் சுத்திகரிப்பு நிலைய மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பொருள் வளம்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**சப்புகஸ்கந்த,**
**களனி, இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-2400110**
**மின்னஞ்சல்: ref.materials@ceypetco.gov.lk**

## கேள்வி அறிவித்தல்

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### சுத்திகரிப்புப் பிரிவு

**REFRACTOTORY WORK, PAINTING & MECHANICAL REPAIRS OF 01F1 FURNACE FOR MAJOR SHUTDOWN 2024**

(கேள்வி இல. – PL/MSD/12/2024)

இலங்கை, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவில் Refractotory work, Painting and mechanical repairs of 01F1 furnace during major shutdown 2024 எனும் பணிக்காக புகழ்பெற்ற நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு (கீழ் நிலை) கோருகின்றது.

விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளும் வேளையில் சுத்திகரிப்பு நிதிப் பிரிவிற்கு 4,000.00 ரூபா (வெட் உட்பட) மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை வைப்புச் செய்தல் வேண்டும். மதிப்பீட்டிற்கு கவனத்திற் கொள்வதற்காக இந்தப் பற்றுச்சீட்டின் பிரதியை விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் மேற்கூறிய விலைமனு ஆவணங்களை www.ceypetco.gov.lk எனும் இணையதளத்தில் பரீசித்துப் பார்க்கலாம்.

களனி, சப்புகஸ்கந்த, இபெகூ சுத்திகரிப்புப் பிரிவு பயிற்சி நிலையத்தின் விரிவுரை அறையில் 2024 ஜூன் 06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும் ''விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம்'' மற்றும் ''தள விஜயம்'' என்பவற்றில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் முறையான பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.

விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி நாள் மற்றும் நேரம் 2024 ஜூன் 06ஆம் திகதி பி.ப. 3.00 மணியாகும் என்பதுடன் முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரத்தில் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் 2024 ஜூன் 14ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு திறக்கப்படும்.

இலங்கை, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவு, திட்டமிடல் திணைக்களம், பிரதி சுத்திகரிப்பு முகாமையாளர் (பராமரிப்பு மற்றும் திட்டங்கள்) அவர்களிடமிருந்து விலைமனு ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி: 011 7732963/2401359/0765448572
தொலைநகல்: 011 2401359/2400436

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (கீழ் நிலை),**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சப்புகஸ்கந்த, இலங்கை.**

# இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## கேள்வி அழைப்பு (IFB)

| உருப்படி இல. | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 01 | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிவேக வீதி செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவில் கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதி மற்றும் புதிய களனிப் பாலத்தின் அதிவேக வீதிப் பகுதிக்கு சுடுகலன்களுடனான பாதுகாப்பு சேவையை வழங்குதல்<br>RDA.EOM&M/ARMED -SEC/CKE&NKB/2023/47 |

மேற்படி செயற்றிட்டத்திற்காக தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2024 மே 28 முதல் 2024 ஜூன் 19 வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கல் அமைச்சின் இணையதளம் www.rda.gov.lk இற்கு பிரவேசிக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

# நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கான அறிவித்தல்
## பதிவாளர் நாயகம் திணைக்களம்.

வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்புக்கள் தொடர்பாக நம்பிக்கைப் பொறுப்பாளர்களினால் பராமரிக்க வேண்டிய தகவல்கள்

2018 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்புக்கள் (திருத்தச்) சட்டம் மற்றும் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் திகதிய இலக்கம் 2108/10 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2019 ஆம் நம்பிக்கைப் பொறுப்பு கட்டளைகளுக்கு (வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்புகளுக்கான தகவல்கள்) அடிப்படையில் நம்பிக்கைப் பொறுப்பொன்றினை உருவாக்கும் போது நம்பிக்கை பொறுப்பாளர்களால் கீழ் குறிப்பிட்டுள்ள தகவல்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் பராமரித்துச் செல்லல் வேண்டும்.

1) **நம்பிக்கைப் பொறுப்பிற்கான விபரங்கள்**
   - நம்பிக்கைப் பொறுப்பின் பெயர்
   - நம்பிக்கைப் பொறுப்பின் முகவரி
   - நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கம்
   - நம்பிக்கைப் பொறுப்பு உள்ளடக்கப்படும் மாவட்டம் மற்றும் காணிப்பதிவகம்.
2) **நம்பிக்கைப் பொறுப்பின் ஸ்தாபகர், நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், சக பொறுப்பாளர்கள் தொடர்பான விபரங்கள்.**
   - பெயர்
   - முகவரி
   - தேசிய அடையாள அட்டை இலக்கம்
3) **பயன்பெறுனர், பயன்பெறுனர்கள், பயன்பெறுனர்களின் வகுப்பு**
   - பெயர் முகவரி
   - தேசிய அடையாள அட்டை இலக்கம்
4) மேலே 2 அல்லது 3 இல் குறிப்பிடப்படாத ஆனாலும் நம்பிக்கைப் பொறுப்பொன்றினை உருவாக்குவதற்கு பங்களிப்பு வழங்கும் ஏனைய நபர்கள் (உப அங்கத்தவர்கள், சட்ட அங்கத்தவர்கள், முகாமையாளர்கள், முதலீட்டு ஆலோசகர்கள், வரி ஆலோசகர்கள், கணக்காளர்கள்)
5) சட்ட நபரொருவரின் பொருள்நயத்திற்காக நம்பிக்கைப் பொறுப்பொன்றினை உருவாக்கியிருக்கும் பட்சத்தில் அப்பொறுப்பின் பொருள்நய உரிமையாளர்களான இயற்கை நபர்கள்.
6) உரிய நம்பிக்கைப் பொறுப்பின், நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் அத்தகவல்களை மூன்று மாதங்களுக்கொருமுறை இயலுமானவரை சரிபார்த்து இற்றைப்படுத்தல் வேண்டும்.
7) ஏதேனும் அசையும் அல்லது அசையா சொத்து தொடர்பாக வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்பின், நம்பிக்கைப் பொறுப்பாளரால் மேலே குறிப்பிட்ட அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட III ஆவது அட்டவணையில் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பதிவு செய்வதற்காக பொறுப்பாவணத்தின் மூலப்பிரதியுடன் காணிப்பதிவாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

**பதிவாளர் நாயகம்**

மேலதிக தகவல்களுக்காக விசாரிக்கவும்

**உதவி பதிவாளர் நாயகம் (நொத்தாரிசு பிரிவு)**
**பதிவாளர் நாயகம் திணைக்களம்**
**இலக்கம் 234/V3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை**
**தொலைபேசி இலக்கம் - 0112889024 / 0112889496**

# விலைமனுக்களுக்கான அழைப்பு
### இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு
## நீர்ப்பாசன அமைச்சு
## நீர்ப்பாசனத் திணைக்களம்
## Procurement of Mini Crawler Excavators with Barges (Pontoon)
### தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல்

1. பின்வரும் வழங்கல்களுக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

**அட்டவணை இல. 01**

| விலைக் கோரல் இல. | பெறுகை விபரங்கள் | எண்ணிக்கை | விலைக் கோரல் செல்லுபடியாகும் திகதி | விலைக் கோரல் பிணைமுறித் தொகை (ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|
| IFB/ID/GOSL/NCB/2024/004 | Procurement of Mini Crawler Excavator with Barge (Pontoon) | 04 | 2024-09-17ஆம் திகதி முதல் | 2,500,000.00 | 2024-10-15ஆம் திகதி வரை |

2. மீளளிக்கப்படாத கட்டணமாக 26,000.00 ரூபாவை செலுத்தியதன் பின் நிறுவனக் கடிதத் தலைப்பில் (மூலப்பிரதி) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்து கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, 230ஆம் இலக்கத்திலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களம், 2ஆம் மாடி, 214ஆம் இலக்க அறை, நீர்ப்பாசனப் பணிப்பாளரிடமிருந்து (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) 2024-05-28ஆம் திகதி முதல் 2024-06-18ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
3. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் விலைக்கோரல் ஆவணங்களைக் கொள்வனவு செய்வதற்கு முன் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மேலதிக தகவல்களை நீர்ப்பாசனப் பணிப்பாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011-2582897 / 011-2582677
4. பின்வரும் வகையில் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.
   **திகதி :** **2024-06-04ஆம் திகதி**
   **நேரம்:** **மு.ப. 11.00 மணிக்கு**
   **இடம் :** **குழு அறை, 04ஆம் தளம், நீர்ப்பாசனத் திணைக்களம்,**
5. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2024-09-17ஆம் திகதி வரை (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்கள் வரை) செல்லுபடியாதல் வேண்டும். மேலும் அத்துடன் 01ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு 2024-10-15ஆம் திகதி வரை (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 119 நாட்கள் வரை) செல்லுபடியாகும் விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறல்லாத விலைமனுக்கள் பதிலளிக்காதவை எனக் கருதப்படும் என்பதுடன் எவ்வித விசாரணையுமின்றி நிராகரிக்கப்படும்.
6. விலைமனு ஆவணத்தின் சகல பக்கங்களிலும் விலைமனுதாரர் கையொப்பமிட்டு அவரது முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்களை 2024-06-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னராகக் கிடைக்கும் வகையில், ஒன்றில் கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, 230ஆம் இலக்க நீர்ப்பாசனத் திணைக்களம், 3ஆம் தளத்திலுள்ள (பிரதான நிதியிடல் அலுவலரின்) 311ஆம் இலக்க அறையில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில், தலைவர், திணைக்கள பெறுகைக் குழு என முகவரியிட்டு மேற்கூறப்பட்ட முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024-06-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
8. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்கல் விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கத்தைத் தயவுசெய்து எழுதவும்.
9. சுய விருப்பத்தின் பேரில் சமுகமளிக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கு தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**பொறி. அஜித் குணசேக்கர,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,**
**நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07**

**2024-05-28ஆம் திகதி.**

# கருவலகஸ்வெவ பிரதேச சபை

2025ம் ஆண்டிற்காக வரவு - செலவுத்திட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளல்.

2025ம் ஆண்டிற்காக கருவலகஸ்வெவ பிரதேச சபையின் வரவு - செலவுத்திட்ட அறிக்கையை தயாரிப்பதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரப் பிரதேசத்தின் பொதுமக்கள் மற்றும் சமூக அமைப்புக்களில் இருந்து அதிகாரப் பிரதேசத்தின் அபிவிருத்தி விடயங்களுடன் சம்பந்தப்பட்ட ஆலோசனைகள் 2024 ஜூன் 30ஆம் திகதிக்கு முன் கிடைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**கே.பீ. ஜகத்குமார,**
**கருவலகஸ்வெவ பிரதேச சபையின் செயலாளர் மற்றும் அதிகாரச் செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**பிரதேச சபை,**
**கருவலகஸ்வெவ,**
**தொ.பே.இலக்கம் : அலுவலகம் : 0322267917**
**மின்னஞ்சல் : karuwalagaswewaps@gmail.com**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# அறிவித்தல்
## 2025 வருடாந்த வரவு செலவு ஆவணம் அமைப்பதற்காக பொதுமக்களுடைய அபிப்பிராயங்கள் மற்றும் அபிவிருத்தி முன்மொழிவுகளை பெற்றுக் கொள்ளல் – ரிதிமாலியத்த பிரதேச சபை

ரிதிமாலியத்த பிரதேச சபையின் 2025 வரவு செலவு ஆவணத்தை அமைப்பதற்கு பொது மக்களுடைய அபிப்பிராயங்கள் மற்றும் முன்மொழிவுகளை பெற்றுக் கொண்டு இம்முறையும் வரவு செலவினை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. ஆகையால் எமது அதிகார பிரதேசத்தில் 2025 ஆண்டுக்கு செயற்படுத்துவதற்காக உங்களுடைய அபிப்பிராயங்கள் மற்றும் அபிவிருத்தி முன்மொழிவுகளை 2024.06.07 ஆம் திகதி பி.ப.4.00 க்கு முன் ரிதிமாலியத்த பிரதேச சபைக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு அல்லது rideemaliyaddaps@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**சபை செயலாளர்,**
**ரிதிமாலியத்த பிரதேச சபை**

# கேள்வி அறிவித்தல்
### இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் (இரூகூ)
## இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பிதுறுதலாகல ஒலிபரப்பு நிலையத்திற்காக 01 No. of 60KW, VHF, 3-Channel TV Broadcast Combiner ஆகியவற்றின் கொள்வனவு

**கேள்வி இல.: 60/2024.06.19**

**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பிதுறுதலாகல ஒலிபரப்பு நிலையத்திற்காக 01 No. 60 KW, VHF, 3-Channel TV Broadcast Combiner ஆகியவற்றின் கொள்வனவிற்காக** இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் முத்திரையிடப்பட்ட கேள்விகளை அழைக்கின்றது.

இந்த கேள்வியில் உற்பத்தியாளர்கள், தரஅங்கீகாரம் பெற்ற முகவர்கள், சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள் மற்றும் உயர்தர தொலைக்காட்சி Broadcast Channel Combiners ஆகியோர் பங்குபற்றலாம்.

**2024.06.18 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக** இரூகூ பெறுகைக்கான உதவி பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கேள்வி ஆவணங்களை அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**கேள்வி ஆவணத்தை கையேற்பதற்காக 5,000 இ.ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக இரூகூ இற்கு செலுத்துதல் வேண்டும்.**

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் **2024.06.19 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக தலைவர், கேள்விச் சபை, இரூகூ, சுதந்திர சதுக்கம், கொழும்பு-07 என்ற முகவரியை வந்தடைதல் வேண்டும். கேள்விகள் 2024.06.19 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு பின்னர்** உடனடியாகவே கேள்விதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்/பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்,**
**சுதந்திர சதுக்கம்,**
**கொழும்பு-07.**
**(SLRC Website – http://www.rupavahini.lk)**

# இலங்கை புகையிரத சேவைகள்
## பெறுகை அறிவித்தல்
**Procurement for the supply of 200,000 Nos. Rubber Pads to suit 80 Lbs Concrete Sleepers.**
**Procurement No.: SRS/F.8002**

01. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் அடிப்படையில் 80 இறாத்தல் நிறையுடைய கொன்கிறீட் சிலிப்பர்களுக்கு பொருந்தக்கூடிய 200,000 எண்ணிக்கையான இறப்பர் பேட்டுக்களை (Rubber Pads) கொள்வனவு செய்வதற்காக உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து இலங்கை புகையிரத சேவைகளின் திணைக்கள பெறுகைக் குழுத் (மேல்மட்டம்) தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.
02. 2024.06.20 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும்.
03. 13,950.00 ரூபா (பதின்மூவாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது ரூபாவை) மாத்திரம் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாகச் செலுத்திய பின்னர், 2024.06.19 ஆம் திகதி பி.ப. 3 மணி வரையும் கொழும்பு-10, ஓல்கட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
04. பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் அவைகளை மூடியவுடன் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளை சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
05. விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டவாறான 600,000 ரூபா (ஆறு இலட்சம் ரூபா) பெறுமதியான விலைமனுப் பிணையொன்று விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
06. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம்.

    **தலைவர்,**
    **திணைக்கள பெறுகைக் குழு (மேல்மட்டம்),**
    **பிரதி பொது முகாமையாளரின் அலுவலகம் (பெறுகை),**
    **இலங்கை புகையிரத சேவைகள்,**
    **பிரதி பொது முகாமையாளரின் (பெறுகை) அலுவலகம்,**
    **ஓல்கட் மாவத்தை,**
    **கொழும்பு-10.**
07. இலங்கை, கொழும்பு-10, ஓல்கட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள், பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீசிக்கப்படலாமென்பதுடன், மேலதிக விபரங்களுக்கு, தயவு செய்து பின்வரும் வழிகளில் தொடர்புகொள்ளவும்.

| | |
|---|---|
| **தொலைபேசி இலக்கங்கள்** | **: 94(11) 2438078 அல்லது 94(11)2436818** |
| **தொலைநகல் இல.** | **: 94(11) 2432044** |
| **மின்னஞ்சல்** | **: srs.slr@gmail.com/tender2@railway.gov.lk** |
| **இணையதளம்** | **: www.railway.gov.lk** |

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேல்மட்டம்)**
**இலங்கை புகையிரத சேவைகள்**

**குறிப்பீட்டு இல. : SRS/F.8002**

## பகிரங்க ஏல விற்பனை

சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி. நிறுவனத்தில் அடகு வைக்கப்பட்டு, 2024, மே 31ம் திகதிக்கு காலாவதியாகும் மீட்கப்படாத தங்க நகைகள் எமது இல. 244, ஜோர்ஜ் ஆர். டிசில்வா மாவத்தை கொட்டாஞ்சேனை, கொழும்பு 13 என்ற இலக்கத்தில் அமைந்துள்ள நிலையத்தில் ஜூன் 19, 2024 அன்று காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை ஏலத்தில் விற்கப்படும்.

### எமது தங்கக் கடன் நிலையங்கள்

| | |
|---|---|
| ■ பொரளை | ■ ஹெட்டன் |
| ■ காலி | ■ பதுளை |
| ■ கம்பஹா | ■ மாவனல்ல |
| ■ கடவத்தை | ■ சிலாபம் |
| ■ களுத்துறை | ■ குருநாகல |
| ■ கொச்சிக்கடை | ■ அனுராதபுரம் |
| ■ கொட்டாஞ்சேனை | ■ சுன்னாகம் |
| ■ கொட்டாவ | ■ தம்புள்ள |
| ■ மாத்தறை | ■ எம்பிலிபிட்டிய |
| ■ நீர்கொழும்பு | ■ யாழ்ப்பாணம் |
| ■ திஸ்ஸமஹாராம | ■ மாத்தளை |
| ■ இரத்தினபுரி | ■ நுவரெலிய |
| ■ வெலிகம | ■ பொலன்னறுவை |
| ■ வத்தளை | ■ கிரான்ட்பாஸ் |
| ■ தமெட்டகொட | |

இவ் ஏல விற்பனையை முன்னறிவித்தலின்றி இரத்துச் செய்யும் அல்லது பிற்போடும் உரிமை இந்நிறுவனத்திற்கே உரியதாகும்.

**Repeat Your ad For Better Offers**

# சிறு விளம்பரம்
## மோட்டார் வாகனங்கள்



**119**
**பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

PV-3255 MAHINDRA MAXIMO, 2012, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714 5 42 958 . 034422



**122**
**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

QO-1862 BAJAJ 2008, YL-6773 BAJAJ 2011, QB-8866 BAJAJ 2005, THREE WHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 , 0705999 163 . 034432

## காணி எடுத்தற் சட்டத்தின் (460 ஆவது அத்தியாயம்) 33 ஆவது பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது இலக்கம் :DSM/DB/LND/4/931-07**

மாத்தளை மாவட்டத்தின் தம்புல்லை பிரதேச செயலாளர் பியல் ஜயசூரிய ஆகிய என்னால், காணி எடுத்தற் சட்டத்தின் (460ஆவது அத்தியாயம்) 33 ஆவது பிரிவின் கீழ் கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்படுகின்ற காணியினை எடுத்ததற்கான பெயரளவு நட்ட ஈட்டுத் தொகையான ஆயிரம் ரூபாயினை (1000.00) உரிமையாளர் பெற்றுக் கொள்ளும் பொருட்டு தம்புல்லை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் LA/49 இன் கீழ் வைப்பில் இடப்பட்டுள்ளது என்பதினை இத்தால் அறிவிக்கின்றேன்.

**திகதி: 2024.05.28** **பிரதேச செயலாளர்**

**அட்டவணை**

காணியின் பெயர் : மீகஹமுலஅஸ்ஸெதும
வரைபட இலக்கம் : ஆரம்பதள வரைபட கோளத்தின் எல்லை 931 (திருத்தியமைக்கப்பட்ட)
துண்டு இலக்கம் : 132 133.134
அளவு : 0.154.0.030.0.010

அமைவிடம் : **துண்டு இலக்கம் 132**
வடக்கு : ஆ.வ.கோ எல்லை 1301 இன் துண்டு இல. 02 மற்றும் இவ் வரைபடத்தின் துண்டு இல. 03
கிழக்கு : தம்மென்னா கால்வாய்
தெற்கு : துண்டு இல. 139
மேற்கு : இவ் வரைபடத்தின் துண்டு இல. 138.133 மற்றும் ஆ.வ.கோ எல்லை 1301இன் துண்டு இல. 02

**துண்டு இலக்கம் 133**
வடக்கு : ஆ.வ.கோ எல்லை 1301 இன் துண்டு இல. 02
கிழக்கு : துண்டு இல. 132 மற்றும் 139
தெற்கு : துண்டு இல. 138
மேற்கு : துண்டு இல. 137 மற்றும் துண்டு இல. 134

**துண்டு இலக்கம் 134**
வடக்கு : ஆ.வ.கோ எல்லை 1301 இன் துண்டு இல. 02
கிழக்கு : துண்டு இல. 133 மற்றும் 138
தெற்கு : துண்டு இல. 137
மேற்கு : துண்டு இல. 136 மற்றும் துண்டு இல. 135

## முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள்
### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
### ஒப்பந்த நிர்வாக நிபுணரொருவரை தெரிவு செய்தல்
**B/31/2024**

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் (BIA) இரண்டாம் கட்ட அபிவிருத்தித் திட்டத்திற்கு இணையாக விமான எரிபொருள் நிரப்பும் முனையம் மற்றும் தற்போதுள்ள எரிபொருள் நீரேற்ற முறைமை மற்றும் புதிய ஏப்ரனில் எரிபொருள் நீரேற்ற முறைமையை நிறுவுதல் ஆகியவற்றின் திட்ட அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றிற்கு பொருத்தமான ஒப்பந்த நிர்வாக நிபுணரை தெரிவு செய்வதற்கான முன்மொழிவுகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள ஆலோசகர் கொள்வனவுக் குழு (CPCD) அழைக்கிறது.

இதனையொத்த பணிகளை மேற்கொண்ட ஆலோசகர்கள்/ ஆசோசனை நிறுவனங்கள் / கூட்டு முயற்சிகள் இந்த ஆலோசனை சேவைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர் என்பதுடன் தேர்வு முறையானது குறைந்த விலை தேர்வு (LCS) முறையை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

விலைமனுதாரர்கள் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 2024-06-11ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது CPC இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/.

விலைமனுக்கள் 2024-06-12ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

விலைமனுக்களை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.

தெளிவுபடுத்தல்கள் (ஏதாவது) இருந்தால் தொலைபேசி: 011-5455331 அல்லது supplies@ceypetco.gov.lk எனும் மின்னஞ்சலினூடாக முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல: 609, கலாநிதி டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09. இலங்கை.**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

| இல. | ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கம் |
|---|---|
| 1. | அதிவேக நெடுஞ்சாலை இயக்கம், பராமரிப்பு மற்றும் நிர்வகித்தற் பிரிவிற்கு சுத்திகரிப்பு பொருட்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல். (விலைமனு இல.: RDA/EOM&M/PRC/2024/GEN/12) |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் வீஅஅ மற்றும் நெடுஞ்சாலை அமைச்சின் இணைய பக்கமான www.rda.gov.lk ஐ 2024.05.28 ஆம் திகதியிலிருந்து 2024.06.10 ஆம் திகதியன்று வரையும் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**அநெஇபநி பிரிவின் பெறுகைக் குழு,**
**பிரதிப் பணிப்பாளர் நாயகம் (அநெஇபநி பிரிவு) மே/பா.,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கஹட்டகஹஹேன, வல்கம,**
**பண்டாரகம.**

**சுகாதார அமைச்சு**
**ஆதார வைத்தியசாலை (போதனா) – கம்பளை**

## பெறுகை அறிவித்தல்

2024,2025ம் ஆண்டிற்காக கீழ்க்காணும் வேலைகளை நிறைவேற்றும் முகமாக பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | உருப்படி | தகைமைகள் | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|
| 01 | சிறிய அளவிலான பிரிக்கப்பட்ட மொடலில் வளிச்சீராக்கி இயந்திரம் மற்றும் மருந்துக் களஞ்சியத்தின் குளிர் அறையை வருடாந்த பழுதுபாரத்தல் மற்றும் சேவை விடயங்களை மேற்கொள்ளல் | EM 4 (CIDA EM4) Mechanical Ventilation & Air Conditioning (MVAC) | ரூ. 2,000.00 |

02. கேள்வி ஆவணங்களை 2024.05.27 முதல் 2024.06.18 வரை வார நாட்களில் மு.ப. 9.00 - பி.ப. 2.00 இற்கு இடைப்பட்ட காலத்தில் கம்பளை, ஆதார வைத்தியசாலையின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக வியாபார பதிவு மற்றும் தகைமைகளை உறுதி செய்யும் சான்றுகள் மற்றும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு காசு செலுத்திய பின்னர் பெற்றுக் கொண்ட பொது 172 மாதிரியின் மற்றும் சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் போது வளிச்சீராக்கி இயந்திரம் பற்றிய சேவைகளுடன் சம்பந்தப்பட்ட அரச அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் இரண்டு வருட அனுபவம் இருத்தல் வேண்டும். அரச வைத்தியசாலைகளில் வளிச்சீராக்கி அமைப்பு பராமரித்தல் மற்றும் சேவைகளில் ஈடுபட்டிருத்தல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படுவதுடன் பராமரிப்பு விடயங்களில் அனுபவம் பற்றிய சான்றிதழ்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. பொறியிடப்பட்ட கேள்விகள் 2024.06.19 பி.ப. 2.30 இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கம்பளை, ஆதார வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்வி உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“சிறிய அளவிலான பிரிக்கப்பட்ட மொடலினாலான வளிச்சீராக்கி இயந்திரம் மற்றும் மருந்துக் களஞ்சியத்தின் குளிர் அறையின் வருடாந்த பழுதுபார்த்தல் மற்றும் சேவை விடயங்களை மேற்கொள்ளல் - 2024 - 2025”** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

05. கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் காலம் முடிவடைந்தவுடன் அதாவது 2024.06.19 பி.ப.2.30 இற்கு வைத்தியசாலை அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

06. கேள்வி ஆவணங்களை அலுவலக நேரங்களில் கட்டணங்கள் இன்றியே பரீட்சிக்கலாம். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**ஆதார வைத்தியசாலை (போதனா)**
**கம்பளை.**

The Trusted Market place for Buying & Selling
adz.lk
it's what you want
It's Simple & Fast
POST YOUR AD
1. Visit www.adz.lk
2. Log In/ Register
3. Select Category
4. Enter Details
5. Upload Photos
6. Pay
7. Publish
Visit www.adz.lk
WE ACCEPT
Contact Us:-
011 2 429 369 | 077 7 270 067
077 7 270 845 | adzsuo@lakehouse.lk

## பெறுகை அறிவித்தல்

### கல்பிட்டிய பிரதேச சபை

கல்பிட்டிய பிரதேச சபையினால் கீழ்க்காணும் வேலை விடயங்களை நிறைவேற்றுவதாக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல | வேலை விடயம் | அண்ணளவான மதிப்பீட்டு வேலை பெறுமதி (ரூ.மி) | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூ) | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைமுறி (ரூ) | ஒப்பந்தப் பதிவுப் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 01 | சேத்தவாடிய வீதியை அபிவிருத்தி செய்தல் (டானியா ஹோட்டல் வீதி) | 13.99 | 5000.00 | 140,000.00 | C6 |
| 02 | கந்தகுளி குடா பீச் வீதியை அபிவிருத்தி செய்தல் (ஓசன் வீவ் ஹோட்டல் வீதி) | 4.82 | 5000.00 | 49,000.00 | C8 |
| 03 | தொடயடிய உள்வீதியை அபிவிருத்தி செய்தல் | 24.51 | 5000.00 | 245,000.00 | C6 |
| 04 | கல்பிட்டிய உச்சமுனை வீதியை அபிவிருத்தி செய்தல் | 19.15 | 5000.00 | 192,000.00 | C6 |

1. 2024.05.20 முதல் 2024.06.11 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை மேற்கண்டவாறு கட்டணங்களைச் செலுத்தி கல்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்தில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
2. சகல கேள்விதாரர்களும் இக் கைத்தொழிலுக்காக மேற்படி கேள்வி பிணைமுறி பெறுமதிக்கு குறித்த அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட கேள்விப் பிணைமுறியொன்றை 2024.05.20 முதல் 2024.07.10 வரை செல்லுபடியாகுமாறு, “செயலாளர், பிரதேச சபை, கல்பிட்டி” பயனாளியாகக் குறிப்பிடப்பட்டு பெற்றுக் கொண்ட கேள்விப் பிணைமுறியொன்றின் மூலம் அல்லது குறித்த கைத்தொழிலின் பெயரில் கேள்வி பிணைத் தொகையாக கல்பிட்டி பிரதேச சபையில் குறித்த தொகையை வைப்புச் செய்து பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. இக் கைத்தொழில் பற்றிய விபரங்களை கல்பிட்டிய பிரதேச சபைக்கு வருகைதந்து அல்லது தொ.பே.இலக்கம் 0322260274/ 0322260275 மூலம் அலுவலக நேரங்களில் விசாரித்து அறியலாம். தேவைப்படும் நபர்களுக்கு வாரத்தின் வேலை நாட்களில் இலவசமாக கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2024.06.12 பி.ப.3.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கல்பிட்டிய பிரதேச சபை அலுவலகத்தில் பொறியிடப்பட்ட கேள்விப் பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன், விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும், கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட நகல்பிரதியை வேறு உறையில் இட்டு உறையின் இடதுமேல் மூலையில் கைத்தொழிலின் பெயர் மற்றும் நகல்பிரதியெனக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
5. 2024.06.12 பி.ப.3.00 இற்கு கல்பிட்டிய பிரதேச சபை அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
6. கேள்விப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை கல்பிட்டிய பிரதேச சபை பெறுகைக் குழுவிற்கு உரியது.
7. சகல கேள்விப் பத்திரங்களும் 2024.06.12 வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**மங்கள ராமநாயக்க,**
**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**கல்பிட்டிய,**
**2024.05.20**
**Gmail : kalpitiyaps@gmail.com**

## பெறுகை அறிவித்தல்

**நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு**
**வசதிகள் அபிவிருத்தி அமைச்சு**
**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்**

DNCWS

## கேள்வி மனுக்கோரல்

கொள்முதல் குழு தலைவரினால் திணைக்களத்திற்கு வாகனங்களை வாடகைக்கு வழங்கும் தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை வைக்கப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது

| இடம் | வாகனத்தின் வகை | மீளளிக்கப்படாத கட்டணம் LKR | விலைமனு பாதுகாப்பு தொகை LKR | தேவையான தகுதிகள் | மனுக்கள் மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| தலைமை அலுவலகம் (கொழும்பு) | Van | 5,000.00 | 40,000.00 | வாகன உரிமையாளர் அல்லது வாகனத்தினை வாடகைக்கு வழங்கும் நிறுவனம் | 2024.06.11 மு.ப.10.00 |
| மாவட்ட அலுவலகம் (புத்தளம்) | Double cab | | 40,000.00 | | |
| மாவட்ட அலுவலகம் (அநுராதபுரம்) | Double cab | | 40,000.00 | | |
| மாவட்ட அலுவலகம் (குருநாகல்) | Double cab | | 40,000.00 | | |
| மாவட்ட அலுவலகம்(மட்டக்களப்பு) | Double cab | | 40,000.00 | | |
| மாவட்ட அலுவலகம் (நுவரெலியா) | Double cab | | 40,000.00 | | |
| மாவட்ட அலுவலகம் (மாத்தளை) | Double cab | | 40,000.00 | | |
| மாவட்ட அலுவலகம் (கேகாலை) | Double cab | | 40,000.00 | | |
| மாவட்ட அலுவலகம் (காலி) | Double cab | | 40,000.00 | | |
| மாவட்ட அலுவலகம் (ஹம்பாந்தோட்டை) | Double cab | | 40,000.00 | | |
| மாவட்ட அலுவலகம் (வவுனியா) | Double cab | | 40,000.00 | | |
| மாவட்ட அலுவலகம் (மாத்தறை) | Double cab | | 40,000.00 | | |

ஒப்பந்த இலக்கம் : **DNCWS/PRO/2024/VEHICLE HIRING /01**

விலைமனு பாதுகாப்பு : **ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்களுக்கு ஒரு விலைமனு பாதுகாப்புத் தொகையினை வழங்க முடியும் (வங்கி பிணை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்)**

நிதிவழங்கும் முகவர் : **UNDP (புத்தளம், அநுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்டங்களுக்குரிய வேன்களுக்கு) மற்றும் GoSL (ஏனைய மாவட்டங்களுக்கு)**

அடிப்படை தேவைப்பாடுகள் : **வாகனப் பதிவு – 2015 அல்லது அதன் பின்னர் மற்றும் வாகனத்தின் தயாரிப்பு வருடம் 2010 அல்லது அதற்கு பின்னர்**

### மேல் கூறப்பட்ட விடயத்திற்கான பொதுவான வழிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1. விலைமனு ஆவணங்கள் வழங்கள் விண்ணப்பதாரரின் கடத் தாளில் எழுத்து மூல விண்ண்பம் மற்றும் வைப்பு செய்யப்பட்ட மீளவழங்கப்படாத கட்டணத்தின் பற்றுச்சீட்டினை கொள்முதல் பிரிவு, இரண்டாம் மாடி, தேசிய சமூக நீர்வழங்கள் திணைக்களம் (விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்வதற்கு கொள்முதல் பிரிவினை தொடர்புகொள்ளவும்) முகவரியில் **2024 ஜூன் 10 வரை விலைமனு ஆவணங்கள் பெற்றுக்கொள்ள முடியும். (மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை)**
2. விருப்பமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடிவதுடன் வழமையான வேலை நேரத்தில் (மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை) சமூகமளித்து **விலைமனு ஆவணங்களை இலவசமாக பார்வையிட்டு** அவ்விடத்தில் கொள்வனவு செய்ய முடியும்.
3. கொள்முதல் பிரிவு, இரண்டாம் மாடி, தேசிய சமூக நீர்வழங்கள் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள **விலைமனு பெட்டியில்** நேரில் வந்து இடுதல் அல்லது **பதிவுத்தபால்** அல்லது **கூரியர் சேவை** மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் சமர்ப்பிக்க முடியும்.
4. மேலதிக தகவல்களுக்கு அழைக்கவும் - **பணிப்பாளர் (கொள்முதல்) தொ.பே: 011 2 774927**
5. **2024 ஜூன் மாதம் 11ம் திகதி மு.ப. 10.15 மணிக்கு பின்வரும் முகவரியில்** விலை மனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலை மனுக்கள் திறக்கப்படும். **தாமதமாக வழங்கப்படும் விலைமனுக்கள் திறக்கப்படாது மீள வழங்கப்படும்.**
6. பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம், இலக்கம் 1114, பன்னிப்பிட்டிய வீதி, தளவதுகொட எனும் முகவரிக்கு **விலைமனு பாதுகாப்புக்கள்** அனுப்பப்பட வேண்டும். மேலும் **2024 செப்தெம்பர் 19** ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகை குழு,**
**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்,**
**இல-1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொட.**
**2024.05.28**

SELACINE

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer adz Classified
Tuition Vehicle Employment Photo Classifieds Miscellaneous House/ Land Rent or Lease Wanted
For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# ஒலிம்பிக் தகுதி பெற யுபுன் இறுதிக்கட்ட முயற்சி: மேலும் போட்டிகளில் பங்கேற்பு

ஒலிம்பிக் தகுதி பெற முயன்று வரும் தெற்காசியாவின் அதிவேக வீரரும் 2022 பர்மிங்ஹாம் பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் வெண்கலப் பதப்பம் வென்றவருமான இலங்கை குறுந்தூர ஓட்ட வீரர் யுபுன் அபேகோன் அடுத்த ஐந்து வாரங்களில் நான்கு தொடக்கம் ஐந்து சர்வதேச போட்டிகளில் பங்கேற்கவிருப்பதாக இலங்கை மெய்வல்லுனர் சம்மேளன வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

பாரிஸ் ஒலிம்பிக் தரப்படுத்தலின்படி அபேகோன் தற்போது 95 ஆவது நிலையில் உள்ளார். ஒலிம்பிக் தகுதிக்கான கடைசி காலக்கெடுவான ஜூன் 30க்குப் பின்னர் 56 வீரர்களே பாரிஸ் செல்ல தகுதியை உறுதி செய்வார்கள்.

இந்நிலையில் ஒலிம்பிக் தகுதிக்காக போட்டியிட்டு வரும் அபேகோன் இதுவரை நான்கு சர்வதேச போட்டிகளில் 100 மீற்றர் ஓட்டப்போட்டிகளில் பங்கேற்றுள்ளார். இதில் ஜெர்மனியில் நடைபெற்ற போட்டியில் 10.15 விநாடிகளில் போட்டியை நிறைவு செய்ததே சிறந்ததாக உள்ளது. இந்தப் போட்டியில் அவர் முதல் இடத்தையும் பெற்றார்.

என்றபோதும் பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கான தகுதிக்கு ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தை 10.00 விநாடிகளுக்குள் நிறைவு செய்திருத்தல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக டுபாயில் நடந்த 100 மீற்றர் ஓட்டப் போட்டியை 10.18 விநாடிகளில் நிறைவு செய்து மூன்றாம் இடத்தைப் பிடித்த யுபுன், ரோம் ஓட்டப்போட்டியில் 10.21 விநாடிகளில் போட்டித் தூரத்தை முடித்து நான்காவது இடத்தையே பிடித்தார்.

இந்நிலையில் ஜூன் மாதத்தில் பிலிப்பைன்ஸில் நடைபெறும் கிரோன் பிரீ மெய்வல்லுனர் போட்டிகள் இரண்டில் பங்கேற்க யுபுன் திட்டமிட்டுள்ளார்.

யுபுனுக்கு வெளிநாடு ஒன்றில் பாரிஸ் ஒலிம்பிக்கிற்கான தகுதியை நிரூபிக்க முடியாமல்போனால் அவர் ஜூன் 27, 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும் 102 ஆவது தேசிய மெய்வல்லுனர் போட்டியில் பங்கேற்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டி எதிர்வரும் ஜூலை 26 ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்பதற்கு இலங்கை தடகள வீர, வீராங்கனைகள் எவரும் இன்னும் தகுதி மட்டத்தை எட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## அட்டாளைச்சேனை மத்தி வலய மட்டத்திற்கு தகுதி

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்



அட்டாளைச்சேனை கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கரப்பந்து தொடரில், அட்டாளைச்சேனை மத்திய கல்லூரி கரப்பந்து அணி வெற்றியீட்டி வலயமட்ட போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளது.

ஒலுவில் அல்–ஹம்றா மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இந்தப் போட்டியில், அட்டாளைச்சேனை மத்திய கல்லூரி கரப்பந்து அணியினர், அட்டாளைச்சேனை அந்–நூர் மகா வித்தியாலய அணியுடன் போட்டியிட்டு வெற்றியீட்டினர்.

அக்கரைப்பற்று கல்வி வலயத்திற்குட்பட்ட, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பொத்துவில் பிரதேச பாடசாலைகளின் கரப்பந்து அணிகளுக்கிடையில் நடைபெற்ற கோட்ட மட்ட கரப்பந்து போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகள் வலயமட்ட போட்டிகளில் பங்கேற்கவுள்ளன.

## தம்பலகாமம் அணி சம்பியன்

கந்தளாய் தினகரன் நிருபர்



மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் தம்பலகாமம் பிரதேச அணி மெய்வல்லுனர் போட்டியில் சம்பியன் பட்டத்தை வென்றது.

கந்தளாய் லீலரத்ன மைதானத்தில் நேற்று முன்தினம் (26) நடைபெற்ற இந்தப் போட்டியில் 05 தங்கம், 06 வெள்ளி மற்றும் 03 வெண்கலப்பதக்கங்களுடன் ஆறாவது தடவையாகவும் மெய்வல்லுனர் போட்டியில் தம்பலகாமம் பிரதேச அணி சம்பியனானது.



## சர்வதேச செய்திகள்

# ரபாவில் அடைக்கலம் பெற்ற மக்கள் மீது இஸ்ரேல் வான் தாக்குதல்: 40 பேர் பலி

தெற்கு காசாவில் இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

'தெற்கு காசாவில் ரபா நகரின் வடமேற்கில் உள்ள அகதிகள் கூடாரங்கள் மீது இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு இராணுவத்தால் படுகொலை நடத்தப்பட்டிருப்பதோடு இதில் 40 பேர் கொல்லப்பட்டு, 65 பேர் காயமடைந்துள்ளனர்' என்று காசா சிவில் பாதுகாப்பு நிறுவனத்தின் மூத்த அதிகாரி ஒருவரான முஹமது அல் முகையில் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

இந்த முகாம் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்ட பகுதியாகும்.

உள்ளூர் நேரப்படி கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 8.45 மணி அளவில் இந்த முகம் மீது குறைந்தது எட்டு ஏவுகணைகள் வீசப்பட்டதாக பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

டால் அல் சுல்தான் பகுதியில் உள்ள கூடாரங்களில் கொல்லப்பட்ட பலரும் உயிருடன் எரிந்திருப்பதாக பலஸ்தீன செம்பிறை சங்கத்தை மேற்கோள்காட்டி பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.

'நாம் இரவுத் தொழுகையை முடித்திருந்தோம்' என்று உயிர் தப்பிய பலஸ்தீன பெண் ஒருவர் தாக்குதல் குறித்து நினைவுகூர்ந்தார். 'எமது குழந்தைகள் உறங்கி இருந்தார்கள். திடீரென்று பெரும் சத்தம் கேட்டதோடு எம்மை சுற்றிய பகுதிகள் அனைத்தும் தீப்பற்றின. குழந்தைகள் கூச்சலிட்டார்கள்... அந்தச் சத்தம் பயங்கரமாக இருந்தது' என்று அந்தப் பெண் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

அங்கு செயற்படும் செஞ்சிலுவை சங்கத்தின் மருத்துவமனை ஒன்றுக்கு தீக்காயங்களுடன் பலரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உயிர்களை காப்பதற்கு எம்மால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறோம் என்று செஞ்சிலுவை சங்கம் கூறியது.

ரபா நகரின் மேற்காக உள்ள பிர்க்ஸ் முகாமை இலக்கு வைத்தே தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதை அல் ஜசீரா செய்தி நிறுவனம் உறுதி செய்துள்ளது. இந்தப் பகுதியில் கடந்த மே 24 ஆம் திகதி வானில் இருந்து பிடிக்கப்பட்ட படங்களில் ஐ.நா. களஞ்சியம் ஒன்றுக்கு அருகில் இங்கு பல நூறு கூடாரங்கள் இருப்பது தெரிகிறது.

கடந்த சில மாதங்களில் முதல் முறையாக ஹமாஸினால் இஸ்ரேலின் டெல் அவிவ் நகர் மீது ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்ட நிலையிலேயே இஸ்ரேலின் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. ரபாவில் இருந்து இஸ்ரேலை நோக்கி எட்டு ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

ரபா மீதான படை நடவடிக்கையை நிறுத்தும்படி இஸ்ரேலுக்கு சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையிலும் இஸ்ரேல் அங்கு தொடர்ந்து உக்கிர தாக்குதல்களை நடத்தி வருகிறது.



இந்நிலையில் ரபாவில் உள்ள ஹமாஸ் வளாகம் ஒன்றின் மீதே இஸ்ரேல் விமானப்படை தாக்குதல் நடத்தியதாகவும் 'துல்லியமான வெடிபொருட்கள் மற்றும் துல்லியமான உளவுத் தகவல் அடிப்படையிலேயே' இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை கடந்த ஞாயிறு இரவு போர்க்கால அமைச்சரவையை கூட்டிய இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, ரபா படை நடவடிக்கையை தொடர்வது குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். அங்கு சில இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஐ.நா. நீதிமன்றத்தின் உத்தரவில் அனுமதி இருப்பதாகவும் அவர் வாதிட்டுள்ளார்.

டெலிகிராமில் அறிக்கை ஒன்றை வெளியிட்ட ஹமாஸ் ஆயுதப் பிரிவான அல் கஸ்ஸாம் படை, 'சியொனிஸ்ட்கள் பொதுமக்கள் மீது மேற்கொள்ளும் படுகொலைக்கு எதிராகவே ரொக்கெட் தாக்குதல்களை நடத்தியதாக' தெரிவித்துள்ளது.

டெல் அவிவில் இருந்து தெற்காக சுமார் 100 கிலோமீற்றர் தொலைவிலேயே ரபா உள்ளமை குறிப்பிடத்தக்கது.

காசாவில் ஆட்சி புரியும் ஹமாஸை ஒழிப்பது மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு ரபா மீது படை நடவடிக்கை அவசியம் என்று இஸ்ரேல் வலியுறுத்தி வருகின்ற நிலையில் அங்கு பெரும் எண்ணிக்கையான பலஸ்தீனர்கள் நிரம்பி வழியும் நிலையில் பாரிய உயர்ச்சேதங்கள் ஏற்படும் அச்சம் அதிகரித்துள்ளது.

காசாவுக்கான எகிப்து எல்லைக்கடவைக்கு அருகில் ரபா நகர விளிம்புகளில் இஸ்ரேலிய டாங்கிகள் நிலைகொண்டிருப்பதோடு அந்த நகரின் கிழக்கு குடியிருப்பு பகுதிகளை நோக்கி டாங்கிகள் முன்னேற்றம் கண்டிருப்பதாக அங்கிருக்கும் குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

என்றாலும் இந்த மாத ஆரம்பத்தில் இங்கு படை நடவடிக்கையை ஆரம்பித்த இஸ்ரேலியப் படை இன்னும் ரபா நகருக்குள் நுழையவில்லை.

இந்த மாத ஆரம்பத்தில் ரபா மீதான படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் அந்த நகரில் இருந்து 900,000க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் மீண்டும் ஒருமுறை வெளியேறி உள்ளனர்.

வடக்கு காசாவிலும் மோதல் நீடிப்பதோடு ஜபலியா நகரில் தாக்குதல்கள் தீவிரம் அடைந்துள்ளன. இந்தப் பகுதி போர் ஆரம்பித்த தொடக்கத்திலும் கடும் மோதல் இடம்பெற்ற பகுதியாக இருந்தது. வடக்கு காசாவில் கட்டடம் ஒன்றுக்குள் இஸ்ரேலிய படைகள் மீது தாக்குதல் நடத்தியதாக பலஸ்தீன ஜிஹாத் அமைப்பின் ஆயுதப் பிரிவான அல் குத்ஸ் படை நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக மோதல் தீவிரம் அடைந்திருக்கும் ஜபலியா முகாமின் கிழக்கு பகுதியில் அமைந்திருக்கும் கட்டத்திற்குள் இருந்த இஸ்ரேலிய படைகள் மீது ரொக்கெட் மூலம் செலுத்தப்படும் கையெறி குண்டுகளை வீசியதாக அல் குத்ஸ் படை கூறியது.

கடந்த எட்டு மாதங்களாக நீடிக்கும் காசா மீதான இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை தற்போது 36,000ஐ தாண்டி இருப்பதோடு மேலும் 80,000க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

## சூறாவளி தாக்கி 18 பேர் உயிரிழப்பு



அமெரிக்காவில் ஏற்பட்ட கடும் சூறாவளியால் குறைந்தது 18 பேர் பலியாகினர். தென் மாநிலங்கள் சிலவற்றில் கடுமையான சேதாரங்கள் ஏற்பட்டன.

இறுதிக் கட்டத் தேடல், மீட்புப் பணிகள் நடந்து வருவதால் உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். டெக்சஸ், ஒக்லஹோமா, அர்க்கன்சா ஆகியவற்றை அமெரிக்க நேரப்படி கடந்த சனிக்கிழமை (25) இரவு புயல்காற்று தாக்கியது. சில நிமிடங்களில் சில வீடுகள் தரைமட்டமானதாகக் குடியிருப்பாளர்கள் கூறினர்.

மின்சாரம், விவசாய நிலங்கள் போன்ற முக்கியக் கட்டமைப்பு வசதிகளும் கடும் சேதாரத்தை எதிர்கொண்டன.

குறைந்தது 20,000 வீடுகளில் மின்சாரம் இல்லை என்று தகவல்கள் கூறுகின்றன.

வரும் நாட்களில் பல மாநிலங்களை மோசமான வானிலை பாதிக்கக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

# பப்புவா நிலச்சரிவு: உயிரிழப்பு ஆயிரங்களை தொடும் அச்சம்

பப்புவா நியு கினியில் இடம்பெற்ற பயங்கர நிலச்சரிவில் காணாமல்போனோர் எண்ணிக்கை ஆயிரங்களை எட்டி இருப்பதாக அந்நாட்டு அரச நிறுவனம் ஒன்று கவலை வெளியிட்டுள்ளது.

நாட்டின் தேசிய அனர்த்த நிலையம் வெளியிட்டிருக்கும் அறிவிப்பு ஒன்றில், வெள்ளிக்கிழமை ஏற்பட்ட இந்த அனர்த்தத்தில் 2,000க்கும் அதிகமானவர்கள் புதையுண்டிருக்கலாம் என்று அஞ்சப்படுவதாக குறிப்பிட்டுள்ளது.



எவ்வாறாயினும் நிலச்சரிவினால் சில இடங்களில் 32 அடி வரை புதையுண்டும் மீட்டு நடவடிக்கைகளுக்கு போதுமாக உபகணங்கள் இல்லாத சூழலிலும் மீட்புப் பணிகளில் சிரமம் ஏற்பட்டிருப்பதால் உயிரிழந்தவர்கள் தொடர்பில் உறுதியான எண்ணிக்கையை வெளியிடுவதில் சிக்கல் நிலவி வருகிறது.

இதுவரை ஒரு டஜனுக்கும் குறைவான உடல்களே மீட்கப்பட்டிருப்பதோடு, ஐக்கிய நாடுகள் சபை 670 பேர் வரை காணாமல்போயிருப்பதாக குறிப்பிட்டுள்ளது.

என்கா மாகாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை மக்கள் உறங்கிக் கொண்டிருக்கும் நேரத்திலேயே இந்தப் பாரிய நிலச்சரிவு ஏற்பட்டதோடு ஒரு கிலோமீற்றர் வரையான பகுதி சேதத்திற்கு உள்ளாகி இருப்பதாக பார்த்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அனர்த்தத்திற்கு முன்னர் அந்தப் பகுதியில் சுமார் 3800 பேர் வரை வசித்துள்ளனர்.

'எனது குடும்பத்தின் 18 பேர் மண்ணில் புதையுண்டனர். அதன் மீதே நான் நின்றிருக்கிறேன். கிராமத்தில் உள்ள மேலும் பல குடும்ப உறுப்பினர்கள் காணாமல் போயுள்ளனர்' என்று எவிட் கம்பு என்ற குடியிருப்பாளர் ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

அனர்த்தம் இடம்பெற்று 72 மணி நேரம் தாண்டிய நிலையிலும் அங்குள்ள மக்கள் உயிர்தப்பியவர்களை தேடி மண் வெட்டிகள், குச்சிகள் மற்றும் வெறுங்கைகளால் மண்ணை தோண்டி வருகின்றனர்.

அனர்த்தம் இடம்பெற்ற பகுதி தொலைதூரத்தில் இருப்பது மற்றும் அருகாமை பகுதியில் பழங்குடியினருக்கு இடையிலான மோதல் நீடித்து வருவதால் மீட்புப் பணிகளுக்கான கனரக உபகரணங்கள் மற்றும் உதவிகள் வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

## இந்தோ–பசுபிக்கில் குவாட் பங்களிப்பு



இந்தோ–பசுபிக் பிராந்தியத்தின் சுதந்திரத்தையும் திறந்த அடிப்படையிலான செயற்பாடுகளையும் மேம்படுத்துவதற்கு குவாட் கூட்டணி நாடுகள் பாரிய பங்களிப்புகளை நல்கி வருவதாக அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருப்பதாவது, அமெரிக்கா, அவுஸ்திரேலியா இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய குவாட் கூட்டணி, பிராந்தியத்தின் இணைய இணைப்பு வசதிகளை மேம்படுத்தியுள்ளதோடு சைபர் தாக்குதல்களை தவிர்க்கவும் உதவி வருகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரமானதும், நிலைபேறானதும் சுபீட்சம் மிக்கதுமான இந்தோ–பசுபிக் பிராந்தியத்தை உருவாக்க ஒத்துழைப்பதில் குவாட் அமைப்பு நாடுகளது தலைவர்கள் ஜப்பானின் ஹிரோஷிமாவில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் விரிவாகக் கவனம் செலுத்தி இருப்பது தெரிந்ததே.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 28ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.